Registered as Newspaper

# உதயன்



ஆசிரியர்: நா.கீதபொன்கலன்

சுடர் : 36 கதிர் : 240 | திங்கட்கிழமை | ஆடி 10 ஆம் நாள் 26 ஜுலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

இன்றைய உதயனுடன்..!

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்!

# 'டெல்டா' விஸ்வரூபம் கொழும்பில் கொத்தணி

## இழுத்து மூடப்பட்டது ஆடைத்தொழிற்சாலை

கொழும்பு, ஜுலை 26

கொரோனா வைரஸின் கொடிய திரிபான 'டெல்டா' இலங்கையின் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கொத்தணியாக உருவெடுத்துள்ளது. இதைய டுத்து குறித்த ஆடைத்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டுள்ளது. 19

## ஹிஷாலினிக்கு நீதிகோரி யாழில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 26

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் இறப்புக்கு நீதிகோரி யாழ் மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று முற்பகல் 9.30 மணிக்கு 19

## கே.கே.எஸ். - வவுனியா ரயில் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 26

நீண்ட இடைவெளிக்குப் பின் வடக்கில் காங்கேசன்துறை - வவுனியா இடையிலான சாதாரண வகுப்பு தொடருந்துச் சேவை இன்று ஆரம்பமாகின்றது. இதன்படி இன்று காலை 5.15 மணிக்குப் புறப்படும் தொட 19



சிங்கள – பௌத்தத்தின் பெயரில்

## தமிழரைக் கொல்வது தேசப்பற்றாக ஆகாது

முன்னாள் அமைச்சர் மங்கள ஆவேசம்

கொழும்பு, ஜுலை 26

சிங்கள, பௌத்தத்தின் பெயரில் தமிழர்களைக் கொல்வது தேசப்பற்றாகாது. கறுப்பு ஜுலை என்ற இனக் கலவரம், போலித் தேசப் 19



## வெலிக்கடைப் படுகொலை நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 26

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற தமிழின அழிப்பைத் தொடர்ந்து ஜுலை 25ஆம் மற்றும் அதற்கு அண்மித்த திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் தங்கதுரை, தளபதி 19

## செப்ரெம்பர் மாதத்துக்குள் அனைவருக்கும் தடுப்பூசி!

அதன்பின் நாடு திறக்கப்படும் அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 26

இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் கொரோனாத் தடுப்பூசி போடப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அதன்பின்னர் நாடு முழுமையாகத் திறக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 19

## வவுனியாவில் காவாலிகள் மதுபோதையில் அட்டகாசம்

நால்வர் மருத்துவமனையில்

வவுனியா, ஜுலை 26

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் மதுபோதையில் சென்ற நபர்கள் தாக்கியதில் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் மருத்துவமனை 19

## கொரோனா தடுப்பூசி ஏற்றுமாறு அரசியல்கைதிகள் கோரிக்கை!

கொழும்பு, ஜுலை 26

தமக்கு விரைவில் கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலைமையில் சிறைச்சாலைக்குள் முறையான சுகாதார வழிமுறைகள் 19

## தவறான முடிவெடுத்து வயோதிப பெண் சாவு

கொடிகாமம், ஜுலை 26

வயோதிபப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இந்தச்சம்பவம் மீசாலை வடக்கில் நேற்று ஞாயிற் 19

## தீயில் எரிந்த குடும்பப்பெண் சிகிச்சை பயனின்றி இறப்பு!

கொடிகாமம், ஜுலை 26

மட்டுவில் வடக்குப் பகுதியில் தீக்காயங்களுக்கு உள்ளாகி கிணற்றினுள் குதித்த இரு பிள்ளைகளின் தாய், யாழ் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். பொற்கொல்லர் வீதி மட்டுவில் 19

## மஹாராஜா நிறுவன முதல்வர் ராஜமகேந்திரன் நேற்று மறைவு

கொழும்பு, ஜுலை 26

இலங்கையின் முதல்தர செல்வந்தர் என்று கருதப்படும் கப்பிட்டல் மஹாராஜா நிறுவனத்தின் முதல்வர் ராஜேந்திரம் ராஜமகேந்திரன் 19



CMG

## மாவட்ட ரீதியில் சமையல் எரிவாயுவுக்கு நிர்ணய விலை

கொழும்பு, ஜுலை 26

சமையல் எரிவாயு சிலிண்டருக்கு மாவட்ட ரீதியில் நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, நாட்டில் சந்தை 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சொத்துக்கள் | கடன் மற்றும் முற்பணம் | வைப்புகள் | தர மதிப்பு

இலங்கை வங்கித் துறையின் முன்னோடி நிதிநிறுவனமாகத் திகழும் இலங்கை வங்கியானது இங்கிலாந்தின் வங்கியாளர் சஞ்சிகை ஊடாக உலகின் உயர்தரத்தில் கணிக்கப்படும் **1000 வங்கிகளின் வரிசையில் மிக உயர் தரவரிசையை மீண்டும் பெற்ற, இலங்கையின் வங்கி** என்ற அதிஉயர் சிறப்புப் பாராட்டுக்களோடு இலங்கையின் முதற்தர வங்கியாக இலங்கை வங்கி மீண்டும் மிளிர்வதில் பெருமிதமடைகிறது.

தேசத்தின் வங்கியாக அர்ப்பணிப்புடன் கூடிய தொடர்ச்சியான வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையோடு எம்மோடு இணைந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் இலங்கை வங்கி தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது!




1975
BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடயத்தில் தன்னுடைய தார்மீக கடமையில் இருந்து இந்தியா விலகியுள்ளது

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

**வவுனியா, ஜூலை 26**



**தமிழர்கள் விடயத்தில் இந்தியா இறுக்கமான நடவடிக்கை எடுப்பதற்கு பின்னடிப்பதானது இந்தியா தன் தார்மீக கடமையில் இருந்து விலகி இருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகின்றது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

தென்னிலங்கையை மையப்படுத்திய தனது திட்டங்களை வகுத்து வந்த சீனா இன்று வடக்கு கிழக்கு நோக்கி அகலக்கால் வைக்கின்ற நிலமையில் இலங்கையை கேந்திரமுக்கிய வதிவிடமாக கருதுகின்ற அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் சீனாவின் வேகமான நகர்வை கட்டுப்படுத்த முயற்சிகளை எடுக்கின்றார்கள் அதன் ஒரு படிதான் ராஜதந்திரிகள் பசில் ராஜபக்சவை சந்திப்பதற்கான காரணம். அதாவது இலங்கைக்கு இருக்கும் நிதி நெருக்கடிகளை கடன்களாக அல்லது நன்கொடைகளாக வழங்குவதன் ஊடாக இலங்கையின் நிதி நெருக்கடிக்கு தற்காலிகத் தீர்வை வழங்கும் அதே நேரத்தில் சீனாவை கட்டுப்படுத்தலாம் என ராஜதந்திர தரப்புக்கள் முயற்சி களை மேற்கொள்கின்றார்கள். இதுதற்காலிக நலனே தவிர நிரந்தர தீர்வு இல்லை பசில் ராஜபக்சவின் பின்னணியில் ராஜதந்திர தரப்புக்கள் இருக்கும் என்று கூற முடியாது. அதேபோல் பசில் ராஜபக்ச எந்தவொரு இடத்திலும் நாங்கள் சீனாவை விட்டு முற்று முழுதாக வெளியேறிவிட்டோம் என்று சொல்வதற்கு தயார் இல்லாத நிலையில் தான் இருக்கின்றார்.

இப்பொழுது மேற்கத்தேயம் தமிழ் மக்களுடைய பிரச்சினையை கையாண்டு அதன் மூலம் ராஜபக்ச அரசுக்கு ஒரு கடிவாளத்தை போடுவதற்கு யோசிக்கலாம் ஆனால் மேற்கு உலகம் மறுபடியும் ஒரே தவறைச் செய்கின்றது. அனைத்து தமிழ் தரப்புடனும் ஒரு பேச்சை நடத்தி அதற்குரிய செயற்திட்டங்களை வகுக்காமல் தனியே கூட்டமைப்புடன் அவர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்கள் ஏற்கனவே நாங்கள் கூட்டமைப்புடன் இருக்கும்போதும் சரி வெளியேறிய பிறகும் சரி வெளிப்படைத் தன்மை இல்லாதது தான் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. ஏற்கனவே பலசந்தர்ப்பங்களில் துருப்பு சீட்டான பலவிடயங்களை கூட்டமைப்பு தவறவிட்டிருக்கும் நிலையில் மறுபடியும் ராஜதந்திரத் தரப்புக்கள் கூட்டமைப்பை கையாளுகின்ற நிலமையில் புதிய அரசமைப்பு பற்றிதான் பேசிக் கொண்டு இருக்கின்றார்கள் இவையெல்லம் நடைமுறைசாத்தியமற்ற விடயத்தை பற்றி பேசுவதாகத் தான் தெரிகிறது - என்றார். (ப-13)



# முதிரை மரக்குற்றிகளுடன் புதுக்குடியிருப்பில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜூலை 26

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட றெட்பானாப் பகுதியில் இருந்து கடத்தப்படவிருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டதுடன், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

றெட்பானா பகுதிக் காட்டில் அறுக்கப்பட்ட பெருமளவான முதிரை மரக்குற்றிகளைக் கொண்டுவந்து வெளிமாவட்டங்களுக்கு கடத்தவிருந்த நிலையில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. மரக் குற்றிகள் இறக்கி வைக்கப்பட்ட காணியின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேக நபர்கள் தப்பிஓடியுள்ள நிலையில் அவர்களை கைதுசெய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

# கழிவகற்றலை மேற்கொள்ள போதிய வாகன வசதி இல்லை

## *கரைதுறைப்பற்று தவிசாளர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜூலை 26

முல்லைத்தீவு, கரைதுறைபற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றலை சிரமமின்றி மேற்கொள்வதற்கு வாகன வசதிகள் போதுமானதாக இல்லை என்று கரைதுறைபற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கழிவகற்றலுக்கு ஆறு உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ் உழவு இயந்திரங்களைப் பாதுகாப்பான முறையில் கழிவகற்றல் நடவடிக்கைக்குப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். ஒரு உழவு இயந்திரம் பாதுகாப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இன்னொரு உழவு இயந்திரம் பாதுகாப்பான கழிவகற்றலுக்காகத் தயார்படுத்தப்பட்டு வருகின்றது. கரைதுறைபற்று பிரதேச சபையில் ஏனைய மாவட்டங்களில் காணப்படுகின்றது போல் பெரிய கழிவகற்றல் வாகனம் இல்லை. இதனை மத்திய அரசு வழங்கலாம். எம்மிடம் உள்ள வாகன வளங்களை வைத்துக் கொண்டுதான் சிறப்பாக கழிவகற்றலை எமது பிரதேச சபை எல்லைப் பரப்பில் மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (ப-13)

# ஹிஷாலினி உயிரிழப்பு 30 அறிக்கைகள் தயார்

கொழும்பு,ஜூலை 26

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிபுரிந்து, தீக்காயங்களால் உயிரிழந்த சிறுமி இஷாலினியின் உயிரிழப்பு தொடர்பில் இதுவரை 30 அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சிறுமியை ரிஷாத்தின் இல்லத்தில் பணியமர்த்துவதற்காக அழைத்து வந்த 60 வயதுடைய தரகரின் வங்கிக் கணக்குகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுமியின் உயிரிழப்பு தொடர்பில் தரகர் மற்றும் ரிஷாத்தின் மனைவி, மனைவியின் தந்தை ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார் .(ஒ-4)

# முழங்காவில் மருத்துவமனை வரை பஸ் சேவைகள் இடம்பெறவேண்டும்

## *பூநகரி பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை*

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி முழங்காவில் ஆதார மருத்துவமனை வரை கிளிநொச்சி மேற்குக்கான பஸ்கள் பயணிக்க வேண்டும் என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஏ32 வீதியில் யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்கும் இடையேயான பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. கிளிநொச்சி நகரில் இருந்து அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, முழங்காவில் வரை உள்ளூர் பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. இவ் உள்ளூர் பஸ் சேவைகள் முழங்காவில் ஆதார மருத்துவமனை வரை நடைபெற வேண்டும் என கடந்த பத்தாண்டுகளாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் முதியோர் சங்கங்கள் ஆகியன நேரிலும் மனுக்கள் மூலமும் மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் பஸ் சேவைகள் நடைபெறவில்லை. ஏ32 வீதியில் முழங்காவில் மகா வித்தியாலய சந்தியில் இருந்து முழங்காவில் ஆதார மருத்துவமனை வரை நோயாளர்கள் முழங்காவில் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து குறித்த 800 மீற்றர் தூரத்தை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. முழங்காவில் மகா வித்தியாலய சந்தியில் இருந்து முழங்காவில் ஆதார மருத்துவமனை வரை உள்ளூர் பஸ் சேவைகள் நடைபெறுமானால் பாடசாலை மாணவர்களும் நோயாளர்களும் நன்மையடைவார்கள். இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் சங்கங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். முழங்காவில் மருத்துவமனை வரை பஸ்கள் சென்று திரும்புவதால் பெரும் நன்மையை மக்கள் அடைவர் என்றார். (ப-13)

# தமிழ்த் தேசிய வீரர்கள் தினத்தில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் கிழிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 26

தமிழ்தேசிய வீரர்கள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் சில இடங்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் கிழித்து எறியப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான கண்காணிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் ஏற்பாட்டில், வெலிக்கடை சிறையில் படுகொலைசெய்யப்பட்டவர்களுக்கு 38 ஆம் ஆண்டு நினைவஞ்சலி செலுத்தும் வகையில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வெலிக்கடை சிறைப் படுகொலையின் போது உயிரிழந்த குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைக்குஞ்சு பண்ணையால் அமைச்சர் டக்கஸுக்கு பலனுண்டு

## வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 26**

**அட்டை வளர்ப்பின் நோக்கம் என்ன? மக்களைவிட அட்டைக்குஞ்சு பண்ணையில் அமைச்சர் டக்ளஸ் அதிக அக்கறை செலுத்துகிறார் என்றால் இதிலே அவருக்கு பலன் கிடைக்க வேண்டும். இதெல்லாம் மக்களுக்குச் செய்கின்ற பச்சைத் துரோகம் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரியாலையில் சீன நிறுவனமானது அட்டைக்குஞ்சு வளர்ப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதற்கு பலரது எதிர்ப்பு இருந்தாலும் அரசு ஆதரவாக இருக்கிறது. முக்கியமாக ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் இந்த நிறுவனத்தின் முகாமையாளராக இருக்கிறார். கடற்றொழில் அமைச்சராக எவரும் வந்துவிடலாம் ஆனால் கடல் சம்பந்தமாக விடயங்களை ஓரளவாவது புரிந்து கொண்டு அங்கே இருக்கின்ற கஷ்டங்கள், மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக பேச வேண்டும். அதற்கு ஆதரவாக இருக்க வேண்டும். வந்த அமைச்சர் பண்ணை வளர்ப்புகள் அதாவது இறால், நண்டு, அட்டை வளர்ப்புக்குள்ளே வந்துவிட்டார்.

போருக்கு முன்னரான காலப்பகுதியில் ஒட்டுமொத்தமான மீன்பிடியில் 47 வீத மீன்பிடிப் பங்களிப்பை வடபுலத்தில் செய்திருக்கிறோம். அப்படியான மீன்பிடி இடத்தைவிட்டு கரையில் பண்ணை வளர்ப்பில் ஈடுபடுகிறார் டக்ளஸ்தேவானந்தா. அப்படியானால் கடல் வளத்தைப் பற்றி அவருக்கு தெரியாது என்றே நாம் கருதவேண்டியுள்ளது.

55 வருடங்களுக்கு முன்னரே நாங்கள் 250 தொடக்கம் 400 வரையான அட்டைப் பண்ணைகளை உருவாக்கி இருக்கின்றோம். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தோம். ஆனால் அட்டைகுஞ்சு வளர்ப்பை நாங்கள் செய்யவில்லை. அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற இந்த அட்டைக்குஞ்சு வளர்ப்பை அரசு எங்களுக்கு பழக்கி தொடர்ந்து செய்யக்கூடிய வாய்ப்பைக் கொடுத்திருக்கலாம். சீனாவின் கையில் கொடுத்து எங்களை கூலிக்காரராக மாற்றி இருக்கிறது. அட்டைக்குஞ்சு வளர்ப்பு தொடர்பில் தங்களுக்குத் தெரியாது என்று கூறிவிட்டு, சீன நிறுவனத்தை இங்கே நிறுவியுள்ளார் அமைச்சர். தமிழ் மக்கள் தொடர்பில் அமைச்சர் அக்கறை கொண்டிருந்தால் சீனா அள்ளிச் செல்வதை எங்களுக்கு கிடைத்திருக்கச் செய்திருக்கலாம். இதைவிட்டுவிட்டு மக்களை மிரட்டும் தொனியில் வார்த்தைகளை விட்டு வருகின்றார்- என்றார். (ப-20)



# திருவையாறு ம.வியில் நுழைவாயில் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நுழைவாயில் கொடையாளர் எஸ்.கே.நாதனின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது. குறித்த கொடையாளரால் 1,020 அடி நீளமான மதில் ஒன்றும் பாடசாலைக்கு அமைத்து வழங்கப்பட்டுள்ளது என்று பாடசாலை முதல்வர் தெரிவித்தார். (ப-13)

# தென்மராட்சியில் பலர் தொற்றாளர்களாக அடையாளம்

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

சாவகச்சேரி ஜூலை 26

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று அறிகுறி காணப்படுவோருக்கு சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர்.பரிசோதனையில் பலர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் பொது இடங்களில் கூட்டமாக நின்றவர்கள் எனவும், மேலும் கோவில்களில் இடம்பெறும், திருவிழாக்களில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் பங்குபற்றியவர்கள் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. இவர்கள் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், அடிக்கடி கைகளைக் கழுவுதல் போன்ற சுகாதார விதிமுறைகளைக் கடைப் பிடிக்காமல் பொது இடங்களிலும் கோவில் திருவிழாக் களிலும் பங்குபற்றியவர்கள் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. தென்மராட்சி பிரதேசத்தில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து கொரோனாப் பரம்பலைக் கட்டுப்படுத்துமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார். (ப-9)



குருபூர்ணிமாவையொட்டி கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டத்தில் விசேட ஹோம அபிசேக நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் ரிஷி தொண்டுநாதன் சுவாமி, நல்லை ஆதீன சுவாமி, வேதாந்தமட சுவாமி, சின்மயாமிஷன் சுவாமி, ஆறு திருமுருகன், இந்திய சிற்பவல்லுனர் புருஷோத்தமன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ப)

# சாவ. சுகாதாரப் பிரிவில் 19 பேருக்கு கொரோனா பரிசோதனை

சாவகச்சேரி, ஜூலை 26



சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்றுமுன்தினம் 19 பேருக்கு பி.சி. ஆர்.பரிசோதனையும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இருவருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொள் ளப்பட்டன.

பணியகத்தில் பிரதி செவ்வாய், வியாழன்,சனி ஆகிய தினங்களில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் பணியகத்துக்கு வந்த 19 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை செய்யப்பட்டது. அத்துடன் அல்லாரை மற்றும் சங்கத்தானை ஆகிய இடங்களைச் சேர்ந்த தனிமைப் படுத்தப்பட்ட இருவருக்கு அன்டிஜென் பரிசோதனையும் மேற்கொண்டனர். அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்ட இருவருக்கும் தொற்று ஏற்படவில்லை என அறிவித்துள்ளனர். இதேவேளை ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களில் மேற்கொள் ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மூவருக்குத் தொற்று ஏற்படடுள்ளதென பணியகத்துக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் மேற்கொண்ட பரிசோதனையில் அங்குள்ள அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றும் மந்துவிலைச் சேர்ந்த ஒருவருக்கும், யாழ். மாநகரசபையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவருக்கும் சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கைதடியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பணியகத்திலும் எழுதுமட்டுவாழ் பகுதியிலும் கடந்த சனிக்கிழமை 43 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 12 பேரின் மாதிரிகள் மறு ஆய்வுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எனவும், ஏனைய 32 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப- 9)

# இரவோடு இரவாகக் காணாமல் போனது 100 வருடங்கள் பழைமை வாய்ந்த மதகு

## ஜனாதிபதி, பிரதமருக்கு மக்கள் முறைப்பாடு

சாவகச்சேரி, ஜூலை 26

சாவகச்சேரி நுணாவில் பருத்தித்துறை வீதியில் கடந்த 100 வருடங்களுக்கு மேலாக நுணாவில் மேற்குப் பகுதியில் காணப்படும் மழைவெள்ளம் வழிந்தோட அமைக்கப்பட்டிருந்த மதகு ஒரு இரவில் காணாமல் போயுள்ளமை குறித்து நுணாவில் மேற்குப் பகுதி மக்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக் கும் முறையிட்டுள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் சந்தியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி வரையான வீதியை தார்க்கலவை வீதியாக மாற்றும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. இந்த தூரத்தில் உள்ள வெள்ளநீர் வழிந்தோடும் பத்து மதகுகளை முதற்கட்டமாக சீரமைப்பதற்கான ஏற்பாடுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுணாவில் சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு அருகில் இரண்டாவது மதகு உள்ளது. மழை காலங்களில் நுணாவில் மேற்கில் உள்ள பல நூற்றுக்கணக்கான காணிகள், ஒழுங்கைகள் போன்றவற்றால் வெளியேறும் வெள்ளமும். அங்குள்ள அல்லிக்கரை, மணங்குணாய், ஆனைக்கோட்டை போன்ற குளங்களிலிருந்து உபரியாக வெளியேறும் வெள்ளநீரும் இந்த மதகு ஊடாக நுணாவில்குளம் கண்ணகை அம்பாள் கோவில் குளத்து[illegible] அங்கிருந்து வாய்க்கா[illegible] யாக வெளியேறும் இந்நிலையில் வீதிச் சீரமைப்பில் ஈடுபட்டவர்கள் இந்த மதகை சீரமைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு அயலில் உள்ள காணியில் தற்காலிக பாதையும் அமைத்திருந்தனர். கடந்த இரண்டாம் திகதி இரவோடிரவாக தற்காலிக பாதை அகற்றப்பட்டு மதகுப் பாவனையும் மறைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் வெள்ளம் வழிந்தோடும் மதகு மூடப்பட்டதால் அடுத்துவரும் மழையின் போது இங்குள்ள குடும்பங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுகிறது. எனவே குறித்த மதகை மீள அந்த இடத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத்தின் மனைவி உட்பட நான்கு பேரையும் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

**கொழும்பு, ஜூலை 26**
**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட 4 பேரையும் 48 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.**

நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நிரஞ்சனா டி சில்வா முன்னிலையில் அவர்கள் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இன்று திங்கட்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவுள்ளோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

**பின்னணி**

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிக்கு அமர்த்தப் பட்டிருந்த நிலையில், எரிகாயங்களுக்கு உள்ளாகி சிறுமி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் ரிஷாத் பதியுதீனின் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மனைவியின் தந்தையும் கைதுசெய்யப்பட்டார். அத்துடன், சிறுமியைப் பணிக்காக அழைத்து வந்த தரகரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, 22 வயதான மற்றுமொரு பணிப்பெண்ணைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் கைதுசெய்யப்பட்டார். 16 வயதான சிறுமி தீக்கிரையாகி உயிரிழந்தமை மற்றும் குறித்த சிறுமியை வன்கொடுமைக்கு உட்படுத்தியமை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் சுமார் 20 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் உறுதி செய்து கொண்ட தடயங்கள், சாட்சியங்களுக்கு அமையவும், பிரேத பரிசோதனை அறிக்கைகளுக்கு அமையவும் 16 வயது சிறுமி வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இது குறித்த விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை, 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியைப் பொலிஸார் நீதிமன்றத்தில் கோரவுள்ளனர்.

இந்த சிறுமிக்கு முன்னதாக அந்த வீட்டில் டயகம பகுதியை சேர்ந்த 22 வயதான பெண் ஒருவரும் 32 வயதான பெண் ஒருவரும் பணிப்பெண்களாக இருந்துள்ளனர். 22 வயதான பெண்ணிடம் வாக்குமூலம் பெறப்பட்டபோது, அவர் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை அமைச்சரின் வீட்டில் பணிப்பெண்ணாக இருந்தார் எனக் கூறியுள்ளார். இதன்போது, தாம் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது 22 வயதான குறித்த யுவதியை 2015ஆம் ஆண்டுக்கும் 2019ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# பி.சி.ஆர். எண்ணிக்கையை குறைத்துள்ளது அரச தரப்பு

*தேசிய தொழிற்சங்க முன்னணி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 26
இலங்கையில் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அரசு குறைத்துள்ளது எனத் தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவர் சமன் ரத்னப்பிரிய குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

'கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் 50 வீதமாகக் குறைவடைந்துள்ளன. பி.சி.ஆர். பரிசோதனைகள் குறைவடைந்ததால், பதிவாகும் நாளாந்த நோயாளர்களின் எண்ணிக்கை மூவாயிரத்திலிருந்து குறைவடைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் நாளாந்தம் 23 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது 12 ஆயிரம் பரிசோதனைகளே மேற்கொள்ளப்படுகின்றன. அதனால்தான் தற்போது நாளாந்தத் தொற்றாளர்கள் 1,500 அல்லது 1,700ஆக அடையாளம் காணப்படுகின்றனர். எனினும், சமூகத்தில் நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அதிகளவில் இருக்க முடியும்' என்றார். (ம-22)

# கொவிட் வைரஸுக்கு வாய்வழியாக மருந்து

பரிசோதனையைத் தொடங்கியது இஸ்ரேலிய நிறுவனம்

கொழும்பு, ஜூலை 26
கொவிட்-19 வைரஸுக்கான வாய்வழி தடுப்பு மருந்து மருத்துவ பரிசோதனையை தொடங்க உலகில் முதன் முதலாக இஸ்ரேலிய நிறுவனம் ஒன்று தயாராகி வருகிறது.

ஜெருசலேமில் உள்ள ஓரமேட் மருந்துகளின் துணை நிறுவனமான ஓராவாக்ஸ் மெடிக்கல் மருத்துவ மையத்தில் பரிசோதனையை செய்ய விரும்புகிறது.

இருப்பினும், இஸ்ரேலிய சுகாதார அமைச்சின் ஒப்புதலைப் பெற நிறுவனம் இன்னும் சில வாரங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. புதிய வாய்வழி தடுப்பு மருந்து, கொவிட்-19 தடுப்பூசியை விட வேகமானது, மலிவானது மற்றும் தயாரிக்க எளிதானது என்று ஜெருசலேம் போஸ்ட் வலைத்தளம் தெரிவித்துள்ளது. (து-இ)

# ஹிஷாலினிக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி, ஜூலை 26
ஹிஷாலினி எனும் சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் பாரதிபுரம் சூசைப்பிள்ளை கடைச்சந்தியில் இடம்பெற்றது.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராமமட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த குறித்த போராட்டத்தில் பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

"பள்ளி செல்ல வேண்டிய ஒரு பாலகியை உன் வீட்டில் வேலைக்கு வைத்துவிட்டு நல்லாட்சி செய்தாயோ?, அரசே சிறுமியின் சாவுக்கு தீர்வு எங்கே?, யாராக இருந்தாலும் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும், பெண் அடிமையின் உச்சம் ஒரு பாலகியின் மரணம்" உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் ஏந்தி உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ப










# ஹிஷாலினியின் மரண விசாரணை தாமதமானால் நீதி மறுக்கப்படும்

மகளிர் அபிவிருத்தி மையத்தின் செயலாளர் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூலை 26
கொழும்பில் மர்மமான முறையில் உயிரிழந்த மலையகச் சிறுமி ஹிஷாலினியின் மரண விசாரணைகள் தாமதிக்கப்படுமானால் சிறுமியின் மரணத்துக்கான நீதி மறுக்கப்பட்ட வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று யாழ். மாவட்ட மகளிர் அபிவிருத்தி மையத்தின் செயலாளர் விமலேஸ்வரி ஸ்ரீ காந்தரூபன் தெரிவித்தார். யாழ். நகரப் பகுதியில் நேற்று ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கேட்டு நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

மலையக சிறுமி ஹிஷாலினி கூண்டில் அடைக்கப்பட்ட கிளியாக இருந்த நிலையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

அவரின் மரணம் தொடர்பில் இலங்கையின் பல பாகங்களிலும் நீதி கேட்டு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் கூலித் தொழிலாளர்களாக மலையகச் சிறுமிகளை அழைத்து வருவதை சம்பந்தப்பட்ட தரப்பினர் நிறுத்த வேண்டும். குறித்த சிறுமி கொழும்பில் வீட்டு வேலைக்காக அழைத்து வரப்பட்டு பிரபல்யம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்த நிலையில் மரணம் சம்பவித்துள்ளது. அவரது மரணம் தொடர்பில் தற்போது பல புதிய விடயங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், நீதியை நிலை நாட்டுபவர்கள் துரிதகதியில் செயற்பட்டு சிறுமியின் மரணத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாது குறித்த சிறுமியின் மரணம் தொடர்பில் முஸ்லிம் பெண்கள் அமைப்புகள் குரல் கொடுக்க முன்வராமை கவலையளிக்கின்றது. ஆகவே இன மத மொழி வேறுபாடின்றி சிறுமியின் மரணத்துக்கு நீதி கிடைக்கும் வரை அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்- என்றார். (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட படுகுழிக்குள் வீழும் அபாயத்தில் நாடு

## இலங்கை மின்சார சபை பொறியியல் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜுலை 26**

**எதிர்காலத்தில் நாடு இருண்ட படுகுழியில் வீழ்ந்துவிடும் அபாயம் இருக்கிறது என இலங்கை மின்சார சபை பொறியியல் சங்கம் எச்சரித்துள்ளது.**

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களின் திட்டங்களை அதிகாரிகள் நிராகரித்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்படும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களின் நிலக்கரி மாபியா என்ற போலிக் கதையை உருவாக்கி நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை எதிர்காலத்தில் நாட்டில் கடுமையான மின் நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்று இலங்கை மின்சார சபையின் செயற்குழு உறுப்பினர் சரிம ஜயநாத் தெரிவித்துள்ளார். (த)

## தடுப்பூசி போடாதுள்ள

# அரச ஊழியர்களுக்கு சிக்கல் கொடுக்கும் அரசு

கொழும்பு, ஜுலை 26

இலங்கையில் கொவிட் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத அரச ஊழியர்களுக்கு தொற்று ஏற்பட்டால் அனுகூலங்களை வழங்காமல் இருக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு தொற்றுக்குள்ளாகும் அரச ஊழியருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கு அனுமதி வழங்காமல் இருப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கொவிட் தடுப்பூசிபெறாத அரச ஊழியர் ஒருவர் ஏதாவது முறையில் தொற்றுக்குள்ளாகுவாராக இருந்தால், அவரை தனிமைப்படுத்தும்போது அவரது தனிப்பட்ட விடுமுறையில் குறைத்துக் கொள்வதற்கு அரசு அவதானம் செலுத்தியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


தடுப்பூசி பெற்றுக்கொண்ட நபர்களின் பாதுகாப்பை தடுப்பூசி பெறாத நபர்களால் இல்லாமல் செய்வதற்கு உரிமை இல்லை என அவர் கூறியுள்ளார். மேலும் தடுப்பூசி பெறாத நபர்கள் தொடர்பில் சில தீர்மானங்கள் எடுப்பதற்கு எதிர்வரும் நாள்களில் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# 25 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

வேலணை, ஜுலை 26

புங்குடுதீவு - வேலணை மற்றும் கரம்பொன் பகுதிகளில் வாழ்கின்ற பொருண்மியம் நலிவுற்ற 25 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்துறை தொகுதி செயலாளரும், வேலணை பிரதேசசபை உறுப்பினருமாகிய கருணாகரன் நாவலனின் 35 ஆயிரம் ரூபா நிதியில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் குணாளன் மற்றும் சண்முகராஜா தரங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



# 'உண்மையான தேசப்பற்றாளர்கள்' திட்டத்தை ஆரம்பிக்கிறார் மங்கள

## குமாரவெல்கமவும் இணைகிறார்?

கொழும்பு, ஜுலை 26

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வரான விமுக்தி குமாரதுங்க மிக விரைவில் இலங்கை அரசியலில் இறங்க உள்ளார் என்று தெரிய வருகிறது.



இந்த செய்தி வெளியாகிய பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு மிக நெருக்கமான அரசியல் சகாவான மங்கள சமரவீர, கொள்கை ரீதியான அரசியல் வேலைத்திட்டம் தொடர்பாக சமூகத்துக்கு தெளிவுபடுத்த உள்ளார்.

'உண்மையான தேசப்பற்றாளர்கள்' என கொள்கை திட்டத்தை அவர் நாட்டுக்கு இன்று அறிமுகப்படுத்தவுள்ளார்.

எதிர்காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்க உள்ள இளம் சமூகத்தை கொள்கை ரீதியாக ஒன்றிணைக்கும் வகையில், இளைஞர், பெண்கள் தலைமையில் இந்த உண்மையான தேசப்பற்றாளர்கள் கொள்கை திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உண்மையான தேசப்பற்றாளர்கள் கொள்கைத் திட்டத்தின் ஊடாக, வீழ்ச்சியடைந்து வரும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப நடுநிலையான கொள்கையை சமூக மயப்படுத்துவதே மங்கள சமரவீரவின் இலக்காக இருந்து வருகிறது.

விமுக்தி குமாரதுங்கவின் அரசியல் வருகையை தயார்ப்படுத்தும் வகையில் மங்கள இந்த கொள்கை திட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்று கூறப்படுகிறது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவும் நாம் இலங்கையர் என்ற கட்சியை ஆரம்பித்ததும் இந்த திட்டத்துக்காகவே எனவும் பேசப்பட்டு வருகிறது. கடந்த பொதுத் தேர்தல் போட்டியிலிருந்து விலகிக்கொண்ட மங்கள சமரவீர, நாடாளுமன்ற அரசியலிலிருந்து விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)



# நீரில் மூழ்கி இறப்போர் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 26

இலங்கையில் நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையானது தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய தொற்றா நோய் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் 800 பேர் உயிரிழக்கின்றனர் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் தற்செயலான இடர்களால் உயிரிழக்கின்ற காரணிகளில் நீரில் மூழ்கி இறக்கின்றமை இரண்டாவது இடத்தில் உள்ளது. இவ்வாறு இறப்பவர்களில் பெரும்பாலானோர் 21 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# துன்பங்களை எதிர்கொள்ளும் குழந்தைகள் பற்றி கணக்கெடுப்பு

## பணிப்பெண்களை அமர்த்தவும் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன

கொழும்பு, ஜுலை 26

பல்வேறு காரணங்களால் துன்பங்களை எதிர்கொள்ளும் குழந்தைகள் தொடர்பில் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. இதற்கமைய, குறித்த திட்டம் நுவரெலியா மாவட்டத்தை மையமாக கொண்டு நேற்று ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, "நாங்கள் ஒரு துரித திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். பெற்றோரை இழந்த குழந்தைகள், பாடசாலைகளுக்கு செல்லாத குழந்தைகள், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைக்கு உட்படுத்தப்படும் குழந்தைகள் தொடர்பில் இதன்போது அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதன்படி, தேவையான தீர்வுகளை வழங்குவதே இதன் நோக்கமாகும். அதேபோல், வீதிக் குழந்தைகளுக்கான வெற்றிகரமான தி[illegible]ஒன்றை செயற்படுத்தவும் எதிர்பார்த்து[illegible]. பிராந்திய மற்றும் மாவட்ட ஒருங்கிணை[illegible]புக் குழுக்கள் இந்த குழந்தைகளுக்காக கட்டாயம் நேரத்தை ஒதுக்க வேண்டும். குறிப்பாக வீட்டுப் பணிப்பெண்ணாக ஒரு பெண்ணை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்றால், கிராம உத்தியோகத்தரின் பரிந்துரை, மகளிர் மேம்பாட்டு அலுவலரின் பரிந்துரை மற்றும் குழந்தைகள் உரிமை அலுவலரின் பரிந்துரை ஆகியவற்றுடன் பிரதேச செயலகத்தில் [illegible]பட வேண்டும். தற்போதுள்ள சில விதிகள் கடந்த கால[illegible] பின்பற்றப்படவில்லை" -என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ராஜமகேந்திரன் எனும் பேராளுமை!

இலங்கையின் வர்த்தக உலகிலும், ஊடகப்பரப்பிலும் கோலோச்சிய மிகப் பெரும் ஆளுமை மிக்க மனிதர் ஆர்.ராஜமகேந்திரன் நேற்று இந்த உலகை விட்டுப் பிரிந்து விட்டார். அவரது இறுதிக் கிரியைகள் கொரோனா சுகாதார நடைமுறைகளுக்கு அமைய நேற்று அமைதியான முறையில் நடந்து முடிந்திருக்கிறது.

மிகப் பெரும் வர்த்தக சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிக் கட்டி ஆண்ட மனிதர் என்பதற்கு அப்பால் இலங்கையில் நடந்த பல அரசியல் மாற்றங்களுக்குக் காரண கர்த்தா, எந்த நெருக்கடிக்கும் அசைந்து கொடுக்காது முன்னணி ஊடக நிறுவனங்களைக் கட்டியெழுப்பியவர் என்ற பல்வேறு முகங்கள் ஆர்.ராஜமகேந்திரனுக்கு இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஒருவர், நாட்டின் பெரும் வர்த்தக சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கி இலங்கையில் பெயர் குறிப்பிடத்தக்க ஒருவராக வளர்ச்சியடைவதென்பது ஒரு சாதாரண விடயமே அல்ல. ஆனால் அதைச் சாதித்துக் காட்டியிருந்தார் ராஜமகேந்திரன். இதற்காக இலங்கை போன்ற நாட்டில் ஒரு தமிழரான ஆர்.ராஜமகேந்திரன் எவ்வளவு நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்திருக்கும் என்பதை விளக்கிக்கூற வேண்டியதில்லை. ஆனால் அவற்றை எல்லாம் தாண்டி, பெரும் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கி பலருக்கு உந்துசக்தியாக வாழ்ந்து காட்டியிருக்கிறார் அவர்.

25க்கும் மேற்பட்ட நிறுவனங்களை கொண்ட குழுமத்தின் தலைவராக இருந்தபோதும், ராஜமகேந்திரன் எளிமையானவராகவும், அனைவராலும் தொடர்பு கொள்ளக் கூடிய நபராகவுமே இருந்திருக்கிறார். இறைபக்தி அதிகம் கொண்ட ராஜமகேந்திரன், எவ்வித அனுகூலங்களையும் ஒருபோதும் எதிர்பார்க்காமல், ஒத்துழைப்பு நல்குபவராகவே அதிகம் அறியப்பட்டவர்.


உதயன் பத்திரிகைக்கு எவ்வாறு அதிகாரத் தரப்பினரால் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டனவோ, அதைப் போன்றே, ராஜமகேந்திரனின் ஊடக நிறுவனங்களுக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரத் தரப்பினரால் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் அசைந்து கொடுக்காது செயற்பட்டு தனது ஊடக நிறுவனங்களை நடத்திக் காட்டியிருந்தார் ராஜமகேந்திரன்.

இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களில் பலவற்றுக்கு ராஜமகேந்திரன் பின்னணியில் நின்றார் என்று கூறப்படுவதுண்டு. அந்தளவுக்கு அரசியலில் பலம் பொருந்திய 'கிங்' மேக்கராக இருந்தவர். ஆனால் எந்த விடயத்திலும் தன்னை முன்னிலைப்படுத்துவதில் விருப்பம் கொள்ளாதவர், அதிகம் ஊடகங்களில் தென்படாதவராகவும் இருந்தார். இதுவே அவரது வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தது என்றும் கூறலாம்.

தமிழராக இருந்தபோதும், பெரும்பான்மை மக்களாலும் விரும்பப்பட்டவர் ராஜமகேந்திரன். நாடளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கானோருக்கு தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து, வாழ்வில் ஒளியூட்டியிருக்கிறார். தனது நிறுவன வலையமைப்புகள் ஊடாக பல்வேறு உதவித் திட்டங்களை மக்களுக்காக நடைமுறைப்படுத்தி வந்தவர். இயற்கை இடர்களின் போதும், அனர்த்தங்களின்போதும் மக்களுக்கு உதவுவதில் எந்தத் தயக்கமும் கொள்ளாதவர்.

தமிழர் தரப்பில் இருந்த நாட்டின் ஆளுமை மிக்க அரசியலை ஆட்டம் காண வைக்கக்கூடிய ஒருவர் மறைந்துவிட்டார். இலங்கையின் ஊடக மற்றும் வணிகத்துறையினருக்கு மட்டுமல்லாது தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் இது பெரும் இழப்பே. ஆயினும் இயற்கையை வெல்ல எவராலும் முடியாது.

ராஜமகேந்திரன் என்ற இலங்கையின் அடையாளமாக மாறிப்போன தமிழ் ஆளுமைக்காக உதயனும் தலை சாய்த்து அஞ்சலிக்கிறான்!



### வடக்கு

# பிரதம செயலராக தமிழர் வேண்டும்

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

**யாழ்ப்பாணம், ஜூலை 26**

**வடமாகாண பிரமத செயலாளர் நியமனத்தை மாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் அவைத்தலைவர் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.**

வடமாகாண பிரமத செயலாளராக சமன் பந்துலசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆராயும் கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

(ப-20)

# அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரண்டாம் டோஸ் இந்த வாரம்

கொழும்பு,ஜூலை 26

அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸைப் போட்டுக் கொண்டவர்களுக்கு, இந்த வாரம் இரண்டாம் டோஸ் ஏற்றப்படும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இந்தப் பாதிப்புக்களிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

நாட்டில் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட சுமார் 6 இலட்சம் பேருக்கு இரண்டாம் டோஸ் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த மாத இறுதிக்குள் இரண்டாம் டோஸை வழங்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# 10 வயதுச் சிறுவனுக்கும் டெல்டா வைரஸ் தொற்று

கொழும்பு,ஜூலை 26

இலங்கையில் முதல் தடவையாக தரம் 5 இல் கல்வி பயிலும், சிறுவனுக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை, பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10




வயதுடைய சிறுவனுக்கே இந்தத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது சிறுவன் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்



நாகமணி கீதபொன்கலன்,
ஆசிரியர், (சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி)
(B.A,SPL.TR.SCI,PGDE, MED)

உதயன் கல்விப் பிரிவு

பரீட்சை இலக்கம் 1

பெயர் : ........................................ நேரம் : 1 மணித்தியாலம் பகுதி 1

**1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01 ஆம், 02 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01) 


1) தாவர உண்ணி பாலூட்டி வேகம்
2) ஊனுண்ணி பாலூட்டி வேகம்
3) அனைத்துமுண்ணி உரோமம் விலங்கு

02) 

1) நாய் பூனை ஒற்றுமை
2) நாய் பூனை ஏமாற்றம்
3) நாய் பூனை விளையாட்டு

3 ஆம் 4 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்களை ஒன்றின் மீது ஒன்றை வைக்கும் போது தோன்றும் விதத்தை தெரிவு செய்க.

03) 

04) 

05) வித்து முளைத்தலின் போது நடைபெறும் நிகழ்வுகள் படங்கள் மூலம் காட்டப் பட்டுள்ளன. ஆறு நிகழ்வுகளையும் ஒழுங்குமுறையில் காட்டும் சரியான விடை எது?



1) 2, 3, 5, 4, 2,1 2) 4,5,6, 3,2,1 3) 4, 2, 3, 1,6, 5

06) ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல் என்பதன் கருத்து

1) செய்யமுடியாத செயலைச் செய்ய முயலுதல்
2) மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்
3) பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்


07) அம்மாவினதும், மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 50 வருடங்கள் ஆகும். மகன் அம்மாவை விட 20 வருடங்கள் இளையவன் எனின், மகனினதும் அம்மாவினதும் வயதுகள் முறையே.

1) 20,30 வருடங்கள் 2) 15,35வருடங்கள் 3) 35,20 வருடங்கள்

08) நேற்றுமுன்தினம் 15 ஆம் திகதியாகும். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை யாகும். எனின், இன்று

1) 17ஆம் திகதி ஞாயிறு 2) 17 ஆம் திகதி செவ்வாய் 3) 13ஆம் திகதி ஞாயிறு

09) உருக்கோலத்தில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க



10) 5 மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள சுவருக்குப் பூச 2 லீற்றர் பூச்சு தேவைப்படுகின்றது.
10 மீற்றர் நீளமும் 4 மீற்றர் உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்.?

(1) 8 லீற்றர் (2) 4 லீற்றர் (3) 40 லீற்றர்

11) எங்கள் வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் கணிதப் பாடத்தில் அல்லது ஆங்கிலப் பாடத்தில் திறமையானவர்கள். எனினும் கணிதம், ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களிலும் திறமைகாட்ட ஒரு மாணவரேனும் இல்லை. இதிலிருந்து விளங்குவது யாதெனில்.

1) எமது வகுப்பில் உள்ள சகல மாணவர்களும் ஒரு பாடத்திலேனும் திறமைசாலிகள் என்பதாகும்.
2) கணிதத்தை விட ஆங்கிலத்தில் திறமையான மாணவர் தொகை கூடியது என்பதாகும்.
3) இரண்டு பாடங்களுக்கும் நூறு வீதம் புள்ளிகள் வாங்கும் மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதாகும்.

12) "இன்னும் ஒரு புள்ளி குறைந்திருப்பின்,நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற தவறியிருப்பேன்"என்று புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் ஒருவர் கூறினார். இதிலிருந்து விளங்குவது என்னவெனில்,

1) புலமைப்பரிசில் பரீட்சைக்கு அவர் நன்றாக ஆயத்தமாகவில்லை என்பதாகும்.
2) விடைத்தாள் திருத்துவதில் ஆசிரியர்களுக்குத் தவறுதல்கள் ஏற்பட்டது என்பதாகும்.
3) அவர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுவிட்டார் என்பதாகும்.

கீழே தரப்பட்டுள்ள விபரத்தின்படி 13ஆம், 14ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

**நீலா, கமலா, சித்ரா, இராணி, பாத்திமா ஆகியோர் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். கமலாவுக்கு முன்னால் பாத்திமா நின்றார். கமலாவுக்கும் நீலாவுக்கும் நடுவே பாத்திமா நின்று கொண்டிருந்தார். இராணிக்கும் பாத்திமாவுக்கும் நடுவே நீலா நின்று கொண்டிருந்தார். இராணிக்கு முன்னால் சித்ரா நின்றார்.**

13) வரிசையின் சரிநடுவே நின்றுகொண்டிருப்பவர் யார்?

1) நீலா 2) பாத்திமா 3) இராணி

14) வரிசையில் நின்று கொண்டிருக்கும் ஒழுங்குமுறையின் படி பிள்ளைகளின் பெயர்களை எழுதினால் அமையும் முறை,

1) கமலா, இராணி,நீலா,பாத்திமா,சித்ரா
2) சித்திரா, இராணி,நீலா,பாத்திமா,கமலா
3) கமலா,சித்ரா, இராணி,பாத்திமா,நீலா

15) வேலையொன்றை 5 மனிதர்கள் 8 நாட்களில் செய்து முடிப்பர் எனின் 2 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்துமுடிப்பர்.

1) 6நாட்கள் 2) 18 நாட்கள் 3) 20நாட்கள்

16) ஒருசதுரக் காணியைச் சுற்றி 40 தூண்கள் சமஇடைவெளிகளில் நாட்டப்பட்டுள்ளன. எனின் ஒருபக்கத்திலிருந்து பார்க்கும் போது எத்தனை தூண்கள் தெரியும்?

1) 9 2) 11 3) 10

17) எனது தந்தையார் வேலை செய்யும் தொழிற்சாலையில் 2 நாட்களுக்கு ஒரு தடவை லீவு கிடைக்கும். நான் வேலை செய்யும் தொழிற்சாலையில் எனக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் லீவு கிடைக்கும். சென்ற 5ஆம் திகதி இருவரும் லீவில் வீட்டில் இருந்தோம். எனின் அடுத்து எந்தத் திகதியில் இருவரும் வீட்டில் இருப்போம்.

1) 8ஆம் திகதி 2) 11ஆம் திகதி 3) 17ஆம் திகதி

18) ஒரு நிரையில் 2 சிவப்பு,2 நீலம்,1 மஞ்சள் என்றவாறு கொடிகள் கட்டப்பட்டிருந்தன. எனின் 58 ஆவது கொடியின் நிறம் என்ன?

1) சிவப்பு 2) மஞ்சள் 3) நீலம்

19) மின்சாரப் பாவனைக்காகக் கட்டணம் கணக்கிடும் போதுமுதல் 30 அலகுகளுக்கு ஒரு அலகு ரூபா 7.00 வீதம் அடுத்த 30 அலகு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாததால் தொழில் நடவடிக்கையில் மாணவர்கள்

## சமூக ஆர்வலர்கள் கவலை

பூநகரி, ஜூலை 26

**பூநகரி கரையோரப் பகுதி மாணவர்கள் பலர் கடற்றொழிலுக்குச் செல்வதால் அவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.**

கொவிட் - 19 காரணமாக பாடசாலை கள். மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் தமது தந்தை மற்றும் உறவினர்களுடன் கடற்றொழிலுக்குச் சென்று வருகின்றனர். தொழில் மூலம் வருமானம் கிடைப்பதால் பாடசாலைகளில் நடத்தப்படும் இணையவழி கல்வி வகுப்புகளுக்கும் செல்வதில்லை. இதனால் இவர்களது கல்வி பாதிக்கபடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வன்னிப் பகுதியில் உள்ள 15 வயதுக்கு குறைந்த மாணவர்கள் வர்த்தக நிலையங்களில் கூலி வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே இதனைத் தடுக்க உரிய அதிகாரிகள், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்

இது தொடர்பாக கடற்றொழிலாளர்கள் சிலரிடம் கேட்டபோது:

பாடசாலைகள் திறப்பதற்கான அறிகுறி காணப்படாத நிலையில் வீடுகளில் தங்கியுள்ள எமது பிள்ளைகளை தொழிலுக்கு அழைத்துச் செல்கின்றோம் இதனால் தினமும் எம்முடன் தொழிலுக்கு உதவிக்கு அழைத்துச் செல்பவர்களுக்கு வழங்கும் கூலி மிகுதியாக கிடைக்கின்றது - என்றனர். (ப-9)



# வாழ்வாதார உதவி

வவுனியா.ஜூலை 26

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாறாவிலுப்பை கிராமத்தைச் சேர்ந்த நோயால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக மாடுகள் வழங்கப்பட்டன.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கோரிக்கைக்கு இணங்க என்.வை.எஸ்.டி.ஏ.யூ.கே அமைப்பின் 'காப்போம் கை கொடுப்போம்' செயற்றிட்டத்தின் ஊடாக இவ் உதவி வழங்கப்பட்டது. (ஜ-13)

# பதிவுசெய்யப்படாத மருந்துப்பொருள்கள்: விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் பதிவு செய்யப்படாத மருந்துப்பொருள்கள் தொடர்பில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுமார் 7 வகையான மருந்துப்பொருள்கள் பதிவு செய்யப்படாது, சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் உணவு மற்றும் ஔடதங்கள் தொடர்பான தலைமை பரிசோதகர் அமித் பெரேரா குறிப்பிட்டார்.

அதற்கமைய, நாடளாவிய ரீதியிலுள்ள மருந்தகங்களில் குறித்த மருந்துப்பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பது தொடர்பில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்யாது விற்பனைசெய்யப்படும் மருந்துப்பொருள்களில், கொரோனா நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளும், விற்றமின்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

நாட்டுக்கு ஔடதங்களை இறக்குமதி செய்யும் ஒருவருக்கு சொந்தமான தெஹிவளை பகுதியிலுள்ள களஞ்சியசாலையில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலின்போது, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்யப்படாத, சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த மருந்துப்பொருள்களை நாட்டுக்கு இறக்குமதி செய்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)


# ஆண் ஒருவரின் சடலம் விசுவமடுவில் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 26

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி முத்துக்குமார் (வயது - 39) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டில் படுத்துறங்கிய நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறந்தவரின் தலைப் பகுதியில் காயம் ஏற்பட்டு குருதிக்கசிவு காணப்பட்டுள்ளது என அவரின் மனைவி தெரிவித்துள்ளார். இந்நிலையில் இறந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-113)



# கிளிநொச்சி நாவலர் வீதியின் சீரமைப்புப் பணி ஆரம்பம்





கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி ஆனந்தபுரம் மேற்கு நாவலர் வீதியின் சீரமைப்பு பணி நேற்றுமுன்தினம் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

250 மீற்றர் நீளம் கொண்ட குறித்த வீதியில் 2 பெட்டி பாலங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், குறித்த வீதி தார் வீதியாக சீரமைக்கப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தி பணிகளுக்காக கரைச்சி பிரதேச சபையால் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீதியின் சீரமைப்பு பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆரம்பித்துவைத்தார். (ஜ-113,6)

# 'நிதி' யோசனை தொடர்பில் உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 26

நாடாளுமன்றில் கடந்த 20ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள 'நிதி' யோசனை தொடர்பில் சட்ட வியாக்கியானம் கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த யோசனையின் பல உட்பிரிவுகளுக்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படுகிறது எனவும், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்றும் உயர்நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என்று மனுதாரரான எரான் விக்ரமரத்ன கோரியுள்ளார்.

வருமானம் அல்லது சொத்து ஆகியவற்றை வெளியிடாத எந்தவொருவருக்கும் குறித்த யோசனை மூலம் இது போன்ற பொது மன்னிப்பு கிடைக்கும். அத்துடன் வெளிப்படுத்தப்பட்ட தொகையில் ஒரு வீதம் 'தன்னார்வ வெளிப்பாட்டுக்கான வரி' என வசூலிக்கப்பட வேண்டிய தொகை, ஏற்கனவே இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் வரி செலுத்துவோரின் வரிப் பொறுப்பை விட மிகக் குறைவு. இந்த வரி மன்னிப்பு என்பது, வருவாய் மீதான மோசடியை நியாயப்படுத்தும். இது, ஏற்கனவே வரி செலுத்திய மற்றும் வரி செலுத்துவோருக்கு பாரபட்சமானது.



கூறப்பட்ட உட்பிரிவுகள் தன்னிச்சையானவை, பகுத்தறிவற்றவை, முற்றிலும் நியாயமற்றவை, அரசியல் அமைப்புக்கு முரணானவை, பொது அறக்கட்டளை கோட்பாடு மற்றும் மக்களின் இறையாண்மைக்கு எதிரானவை என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, நிதி பற்றிய குறித்த யோசனை, வரி ஏய்ப்பை ஊக்குவிக்கும் என்றும், இதனால் இலங்கைக்கு நன்மை கிடைக்காது என்றும் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (து-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை அதிகரிப்பதைத்தவிர மாற்றுவழிமுறை அரசிடம் ஒன்றுமேயில்லை

## வலுசக்தி அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 26**

**எரிபொருள் விலையைக் குறைக்க எந்த சாத்தியப்பாடும் இல்லை. இப்போதுள்ள நிலையில் எரிபொருள் விலையை அதிகரிப்பதைத்தவிர மாற்று வழிமுறை ஒன்றுமே இல்லை. அவ்வாறு விலையைக் குறைக்கும் மாற்றுவழி என்ன? அல்லது அதற்கான வேலைத்திட்டம் என்னவென்பதும் எனக்கு தெரியவில்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் நாட்டில் தொடர்ச்சியான எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், இது குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எரிபொருள் விலை குறைக்கப்படுவது குறித்து இன்னமும் அரசு பேச்சு நடத்தவில்லை. இவ்வாறான நிலையில் எரிபொருள் விலையை குறைப்போம் என வாக்குறுதி கொடுத்தவர்களிடம் ஏன் எரிபொருள் விலை குறையவில்லை என மக்கள் கேட்க வேண்டும். எனக்கு எதிராக ஒரு சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் இறுதியாக எனக்கு 152 வாக்குகள் கிடைத்தன. ஆகவே நான் அறிவித்த முடிவு நியாயமானது என்பதை சகலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இப்போதுள்ள நிலையில் எரிபொருள் விலை குறையாது என்பதை நான் வெளிப்படையாகக் கூறினேன், எரிபொருள் விலையை குறைக்க முடியாது என்பதையும் நான் தெளிவாகக் கூறுகின்றேன்.

எரிபொருள் விலையை அதிகரித்தோம் எனக் கூறி எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த எதிர்க்கட்சியின் 43 உறுப்பினர்களில் ஒருவருக்கேனும் எரிபொருள் விலையை குறைக்க மாற்று வழிமுறை என்னவென்பதை கூறமுடியாது போயுள்ளது.

எரிபொருள் விலையைக் குறைக்கலாம் என்ற திட்டம் யாரிடமாவது இருந்தால் அதனைக் கூறினால் ஆராய்ந்து பார்க்க முடியும்.

எனது அமைச்சுப்பதவி நீக்கப்படுமா, அல்லது மாற்றப்படுமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது. அதனை ஜனாதிபதியும் பிரதமருமே தீர்மானிக்க வேண்டும். அரசில் அங்கம் வகிக்கும், அமைச்சரவை உறுப்பினர்கள் இல்லாதவர்கள் எனது அமைச்சுப்பதவியை பறிக்க வலியுறுத்துகின்றனர். எனது அமைச்சுப் பதவி பறிபோகும் என நான் நினைக்கவில்லை. எந்தத் தவறும் செய்யாது எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்பை இராஜினாமா செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை - என்றார். (த-இ)

## குளவி கொட்டி மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 26

குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 51 வயது குடும்பஸ்தரும், குடமியன் பகுதியைச் சேர்ந்த 46 வயது குடும்பஸ்தரும் கொடிகாமத்தைச் சேர்ந்த 70 வயது முதியவருமே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

இந்தக் குளவிகள் எங்கிருந்து வருகின்றன என்று தெரியவில்லை எனவும், கடந்த இரு நாள்களாக கடுமையாக காற்று வீசுவதால் கூடு கலைந்து குளவிகள் பறந்து திரியலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

குளவிக்கூடு அமைந்துள்ள பகுதியை கண்டால் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-9)



## கற்றலுக்கு நிதியுதவி

கொடிகாமம், ஜூலை 26

பளை இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் 8 பேருக்கு கற்றலுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பாட சாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் அதிபர் க.ஞானசீலன் தலைமையில் நடை பெற்றது.

ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேளின் ஏற்பாட்டில் புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் இடைக்காட்டை ச் சேர்ந்த செல்வக்குமரன், தனது புதல்வி சரண்யாவின் 21 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்த நிதியுதவியை வழங்கினார். (ஐ-159)

## கொவிட் - 19 மாத்திரமன்றி டெங்கும் எகிறுகின்றது



கொழும்பு, ஜூலை 26

நாட்டில் கொவிட் தொற்றாளர்கள் மாத்திரமின்றி டெங்கு நோய்க்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது என தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரையில் 15 ஆயிரத்து 854 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இவற்றில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர். அங்கு கடந்த ஜூன் மாதம் வரை ஆயிரத்து 235 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொழும்பை அடுத்ததாக கம்பஹா மாவட்டத்தில் 491 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதேபோன்று ஏனைய பல மாவட்டங்களிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகளின் அடிப்படையில் கடந்த ஜனவரியில் 2 ஆயிரத்து 122 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரியில் 2ஆயிரத்து 355 டெங்கு நோயாளர்களும், மார்ச்சில் 2 ஆயிரத்து 312 டெங்கு நோயாளர்களும், ஏப்ரலில் 2 ஆயிரத்து 241 டெங்கு நோயாளர்களும், மே மாதத்தில் ஆயிரத்து 441 டெங்கு நோயாளர்களும், ஜூன் மாதத்தில் 2 ஆயிரத்து 997 டெங்கு நோயாளர்களும் , இந்த மாதத்தின் கடந்த இரு வாரங்களில் 787 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு பாதிப்பிலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள சுற்றுச் சூழலை நுளம்பு பெருக்கம் ஏற்படாத வகையில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (த-இ)

## தொடர்மாடி குடியிருப்பில் தீ

கொழும்பு, ஜூலை 26

கொழும்பு கொட்டாஞ்சேனை தொடர்மாடி குடியிருப்பொன்றில் நேற்றுமுன்தினம் தீப் பரவலொன்று ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு தீயணைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை மேபீல்ட் பகுதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்பொன்றின் மின்கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த தீப் பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. தீப் பரவலைக் கட்டுப்படுத்த இரண்டு தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தீ முழுமையாக .கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் தீயணைப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## தாக்குதலுக்கு இலக்காகி சகோதரிகள் இருவர் காயம்

இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-9)

# ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு பஸ் சேவை ஏற்படுத்தித் தரவும்

## கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை 26

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்துக்கான பஸ் சேவையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் ஏற்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஆனைவிழுந்தான்குளம் கிராமம் உருவாக்கப்பட்டது. இக் கிராமம் உருவாக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு அதிகமான தூரம் நடந்து சென்றே மக்கள் பஸ்களில் பயணிக்க வேண்டிய அவலம் காணப்படுகின்றது. 385 குடும்பங்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் பஸ் சேவை நடைபெறுவதில்லை. இக் கிராமத்தில் இருந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு கூட செல்ல முடியாத நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. கிளிநொச்சி மேற்கில் இடம்பெறும் பஸ் சேவைக்காக நீண்ட தூரம் மக்கள் நடந்து செல்லவேண்டியுள்ளது.

குறித்த பஸ் சேவை ஆனைவிழுந்தான்குளம் பாடசாலை வரை நீடிக்கப்பட வேண்டும் என்று பல தடவைகள் மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த இலங்கையர்கள்

## புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை

**கொழும்பு,ஜூலை 26**

**இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 38 இலங்கையர்கள் தொடர்பில், இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.**

தமிழகப் பொலிஸாருடன், மங்களூர் பொலிஸார் இணைந்து சுமார் ஒரு மாதமாக நடத்திய தேடலில் 38 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இந்தியாவில் தங்கியிருந்து, சட்டவிரோதமாக கனடாவுக்கு குடிபெயரத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக நபர் ஒருவருக்கு, இலங்கை மதிப்பில் 10 லட்சம் ரூபா வீதம் பரிமாறப்படவிருந்தது.

மங்களூர் நகரப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் மேலதிக விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்த வழக்கு இந்திய தேசிய புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த மார்ச் மாதம் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)



## குருதிக்கொடை முகாம்

சுழிபுரம்,ஜூலை 26

குருதிக்கொடை முகாம் ஒன்று சுழிபுரம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தொல்புரம் சர்வோதய நிலைய வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கான அனுசரணையை யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனம், தொல்புரம் கொட்டடியம்பதி ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயம், தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் மற்றும் தொல்புரம் சர்வோதயம் முதலான பொது அமைப்புக்கள் வழங்கியிருந்தன.

இதன்போது 33 கொடையாளர்கள் குருதித்தானம் வழங்கினர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ச.சிறீபவானந்தராஜா, சிறப்பு விருந்தினராக நல்லூர் றோட்டறிக் கழகத் தலைவர் த.கபிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## சீனாவுடன் இரகசிய பேச்சு கண்காணிக்கும் இந்தியா

கொழும்பு,ஜூலை 26

சீன ஆட்சியாளர்களுடன், இலங்கையின் உயர்மட்ட அரசியல்வாதிகள், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் நடத்தும் இரகசிய பேச்சுக்களை, இந்தியா கண்காணித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் நாட்டின் தயாரிப்பான பெகாசஸ் என்ற மென்பொருள் ஊடாக, இந்தியா இந்தக் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றது என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சீனாவின் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பில் அரசு மற்றும் அமைச்சரவை எடுக்கும் முக்கிய முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் மென்பொருள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

## காணாமல் போன சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

### இருவர் கைது

கொழும்பு,ஜூலை 26



இரண்டு வாரங்களுக்கு முன்னர் காணாமல் போன 15 வயதுச் சிறுமி ஒருவர், பாலியல் துஷ்பிரயோகத்துக்குள் ளாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மொறட்டுவப் பகுதியில் நடந்துள்ளது.

இதனையடுத்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை, மற்றும் அதற்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் தந்தையும், மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமியைக் காணவில்லை என்று அவரது பாட்டியால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்றன.

சிறுமியும், 25 வயது இளைஞன் ஒருவரும் பேஸ்புக் மூலம் நட்பாகி, பின்பு காதலர்களாக மாறியுள்ளனர். சிறுமியின் தாய் வெளிநாட்டில் உள்ள நிலையில், தந்தை போதைக்கு அடிமையாகி வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி குறித்த இளைஞனுடன் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். மேலதிக விசாரணைகளின் போது சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் என்று கூறப்படும் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இளைஞனும், அவரது தந்தையும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் மொறட்டுவ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.4)

## தனிமைப்படுத்தல் விதிமீறல் இதுவரை 52,000 பேர் கைது

கொழும்பு,ஜூலை 26




கொரோனாத் தொற்றுக் காலத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 52 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் 6 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதேவேளை தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோரைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். தனிமைப்படுத்தல் விதிகளும், பயணக்கட்டுப்பாடுகளும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

இதற்கிடையில் மேல் மாகாணத்தில் முகக்கவசம் அணியாத மற்றும் முகக்கவசத்தை சரியாக அணியாத நபர்களைக் கைது செய்வதற்கான விசேட சோதனை நடவடிக்கைகள் இன்று முதல் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## மீண்டும் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

கொழும்பு,ஜூலை 26

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், கடந்த 4 நாள்களில் மட்டும் நாளாந்தம் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் 11 ஆயிரத்து 56 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## இலங்கைக்கு எதிராக சுவிஸில் புதிய அமைப்பு

கொழும்பு,ஜூலை 26

இலங்கைக்கு எதிராகப் போராடுவதற்கு, சுவிட்ஸர்லாந்தில் பிறந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து நிதர்சன் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர் என்று தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பெசல் நகரை மையமாகக் கொண்ட இந்த அமைப்பு, 'தமிழீழ இளைஞர்' என்ற பெயரில் அடையாள அட்டையை வெளியிடவுள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்படவில்லை என்பதால், தமிழ் இளைஞர்களை இந்த அமைப்பில் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புக்காக மாதாந்தம் 10 சுவிஸ் பிராங்குகளை மக்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கில் உள்ள இளைஞர்களும் இந்த அமைப்பில் சேர்க்கப்படவுள்ளனர்.

இந்த புதிய அமைப்பு விடுதலைப் புலிகளின் புதிய தலைமுறை என்று ஜெனிவாவில் உள்ள தமிழர்கள் தெரிவித்துள்ளனர் என்று அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்கு அமர்த்தப்படும் வயதெல்லை அதிகரிப்பு



கொழும்பு,ஜூலை 26

**வேலைக்கு அமர்த்தப்படும் வயதெல்லையை 18 ஆண்டுகளாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் குறித்து சிறப்பு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வேலைக்கு அமர்த்தப்படும் வயதெல்லையை 18 ஆண்டுகளாக அதிகரிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தொழில் திணைக்களம், குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் அவை தொடர்பான பிற நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தங்களை, நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4,சி)



# 15 நாள்களில் 611 பேர் சாவு

கொழும்பு,ஜூலை 26

நாட்டில் கடந்த 15 நாள்களில் மட்டும் 611 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 353 ஆண்களும், 258 பெண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 30 வயதுக்குட்பட்டவர்கள் 5 பேரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்கள் 147 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 459 பேரும் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# 15 வயதுச் சிறுமிக்கு இரட்டைச் சிசுக்கள்



கொழும்பு,ஜூலை 26

15 வயது சிறுமி ஒருவர், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவருக்கு இரட்டைச் சிசுக்கள் பிறப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சம்பவம் ஹாலிஎலப் பகுதியில் நடந்துள்ளது.

திடீர் சுகவீனம் காரணமாக சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பரிசோதனையில் அவர் கருவுற்றிருப்பது தெரியவந்துள்ளது.

அத்துடன் அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ,4)

# காற்றின் வேகம் அதிகரிக்கும்



கொழும்பு,ஜூலை 26

நாட்டில் எதிர்வரும் நாள்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அதற்கமைய, மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோமீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வட மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் காற்று 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

எனவே மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் பலத்த காற்று வீசும் சந்தர்ப்பங்களில் கடல் கொந்தளிப்பாகவே காணப்படும். மீனவர்களும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. (ஒ.4)

# ரிஷாத்தின் வீட்டில் பொலிஸார் சோதனை

கொழும்பு,ஜூலை 26

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வீட்டில், பொலிஸார் நேற்று முன்தினம் சோதனை நடத்தியுள்ளனர்.

ரிஷாத் வீட்டில் பணிபுரிந்து, மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் இறப்புத் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பொலிஸ் குழுவினர், ரிஷாத் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர்.

விசாரணைகளில் சிறுமி தனக்குத் தானே தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார் என்ற குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தீக்காயங்களுக்குள்ளான சிறுமி, மறுநாளே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (ஒ,4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலை முன்னரே அறிந்தது இந்தியா


கொழும்பு,ஜூலை 26

இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான தகவல்களை, இந்தியா முன்கூட்டியே அறிந்துள்ளது.

பெகாசஸ் என்ற மென்பொருள் மூலம் தாக்குதல் நடத்தப்படும் திகதி, நேரம், நபர்கள், இடம் என அனைத்தையும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டிருந்தனர் எனறு தெரிவிக்கப்படுகின்றது.

பெகாசஸ் என்ற மென்பொருளைப் பயன்படுத்தி சஹ்ரானின் அல்லது அந்தக் குழுவின் முக்கியஸ்தர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டு, அந்தத் தகவல்களை இந்தியப் புலனாய்வுப் பிரிவினர், இலங்கைப் புலனாய்வு பிரிவினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் பெகாசஸ் என்ற மென்பொருள் விடயம் இந்திய அரசியலில் தற்போது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. முக்கிய தலைவர்களின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டனர் என்று தெரிவித்து நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகின்றது.



இதேவேளை பெகாசஸ் மென்பொருள் காரணமாக உலகம் முழுவதும் லட்சகணக்கான மக்கள் நிம்மதியாக தூங்குகின்றனர். வீதிகளில் பாதுகாப்பாக நடக்கின்றனர் என்று மென்பொருளைத் தயாரித்த என்.எஸ்.ஓ. குழுமம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த இந்தக் குழுமம், பெகாசஸ் என்ற உளவு மென்பொருளைத் தயாரித்து உலக நாடுகளுக்கு விற்பனை செய்துள்ளது. (ஒ.4)

# அரச நிறுவனங்களுக்கு பஸிலின் திடீர் உத்தரவு



கொழும்பு,ஜூலை 26

அரச நிறுவனங்களில் புதிதாக சேவையாளர்களை இணைத்துக் கொள்வதை தற்காலிகமாக இடை நிறுத்துமாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச, நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாகாண ஆளுநர்கள், மாவட்டச் செயலாளர்கள், அரச நிறுவன பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

அரச நிறுவனங்களின் செலவுகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு இயலுமான அளவு கட்டுப்படுத்துமாறும், அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக அரச வருமானம் குறைவடைந்துள்ள காரணத்தால், இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார்.

அதேவேளை தேசிய தொழில்துறை மற்றும் தேசிய உற்பத்திகளின் மேம்பாடு ஆகியவை குறித்து அரச நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். வீழ்ச்சியடைந்துள்ள தேசிய தொழில்துறையை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

முதலீட்டாளர்கள் மற்றும் கடன் மதிப்பீட்டு நிறுவனங்களின் வணிக சமூகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயற்படுத்த வேண்டும் என்று நிதி மூலதனச்சந்தை மற்றும் நிதியமைச்சுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுகளுக்கு நிதியமைச்சர் ஆலோசனை வழங்கினார். (ஒ.4,சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக் காக 1 அலகுக்கு ரூபா 8.00 வீதமும் அதற்கடுத்த அலகுகளுக்காக ஒரு அலகுக்கு ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும். அதற்கமைய மின்சார அலகுகள் 95க்கு அறவிட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூபா 800 2) ரூபா 600 3) ரூபா 300

ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலைக்கு வந்த நேரம் பின்வரும் கடிகாரங்களில் காட்டப்பட்டுள்ளது.
அதற்கேற்ப 20, 21, 22 ஆம்




20) பாடசாலைக்கு முதலாவதாகவும் இறுதியாகவும் வந்த இரு பிள்ளைகளும் யாவர்?

1) மாலா, கரண் 2) விமலா, நிசார் 3) மாலா, விமலா

21) கரன் பாடசாலைக்கு வரும் போது பாடசாலைக்கு வந்திருந்த இரு பிள்ளைகளும் யாவர்?

1) கரண்,நிசார் 2) மாலா,நிசார் 3) மாலா,கரண்

22) இப் பிள்ளைகள் பாடசாலைக்கு வந்த நேரங்களுக்கேற்ப அவர்களுடைய பெயர்களை ஒழுங்குபடுத்தினால் சரியான விடை?

1) மாலா, நிசார், கரண், விமலா 2) மாலா, நிசார்,, கரண், விமலா
3) நிசார், மாலா, கரண், விமலா

23) மீன் 1 kg இறைச்சி 1kg என்பவற்றின் விலை ரூபா 800 ஆகும். இறைச்சி 1kg இன் விலை மீன் 1kg ஐ விட ரூபா 200 கூடுதலாகும். மீன் 1kg இன் விலை யாது?

1) ரூபா 200 2) ரூபா 400 3) ரூபா 300


24) ஒரு கார் ஒரு மணித்தியாலத்தில் 60km செல்கின்றது. அந்தக் கார் நிறுத்தாமல் ஒரே வேகத்தில் சென்றதாயின் இரண்டரை மணித்தியாலங்களில் எவ்வளவு தூரம் சென்றிருக்கும்?

1) 150km 2) 160 km 3) 200 km

25) ஒரு விவசாயி ஒரு வாரத்தின் ஒவ்வொரு நாளும் பி.ப 9 மணிக்கு நித்திரைக்குச் சென்று மறுநாள் மு.ப 4.30 மணிக்கு நித்திரையிலிருந்து எழும்புகின்றார். ஒவ்வொரு நாளும் அவர் எத்தனை மணித்தியாலங்களுக்கு நித்திரைகொள்ளாமலிருக்கின்றார்?

1) 7 மணி 30 நிமிடம் 2) 13 மணி 30 நிமிடம்
3) 16 மணி 30 நிமிடம்


26)



முழு உருவத்தின் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?


(1) 16
(2) 4
(3) 15

27) இலங்கையின் பகுதிகளை இப்படம் காட்டுகின்றது. கூடு B யினால் மாவட்டங்கள் குறிக்கப்படுமாயின் கூடு A யினால் காட்டப்படுவதை தெரிவுசெய்க.




1) கிராமம்
2) மாவட்டம்
3) மாகாணம்

28) Cஎனும் வட்டத்தினால் மான்களைக் குறிப்போமானால் வட்டம் B யினால் குறிக்கப்படுவது எது?




1) முலையூட்டிகள்
2) பறவைகள்
3) விலங்குகள்

29) கொறணவனின் தந்தைக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். அதில் மூத்தவர் அகரம் அடுத்தவர் இகரம் அடுத்தவர் உகரம் எனின் அடுத்த பிள்ளை யார்?

1) எகரம் 2) ஒகரம் 3) கொறணவன்

30) பின்வரும் பாடல் வரிகளைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

**தலைசீவிப் பள்ளிக்கே ஓடுநல்**
**தங்கப் பதுமையாம தோழர்களோடு**
**விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! அதை**
**விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!**

31) பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள விலையில்லா மெய்ப்பொருள் எது?

1) தங்கம் 2) கல்வி 3) தோழர்கள்

32) பாடலில் உள்ள பொம்மையைக் குறிக்கும் சொல் எது?

1) செல்வி 2) தோழர் 3) பதுமை

33) துவிச்சக்கரவண்டியில் இருவர் சென்றுகொண்டிருந்தனர். ஒருவர் மற்றையவரின் அக்கா ஆவார். மற்றையவர் அக்காவின் தங்கை அல்லர் எனின் அக்காவிற்கு மற்றையவர் என்ன உறவு?

1) தங்கை 2) தாய் 3) தம்பி

34) வியாபாரி ஒருவர் ஒரு பொருளின விலையை டுLOCK/OK எனும் ஆங்கில எழுத்துக்கள் மூலம் எழுதப்பட்டிருந்த முறை இங்கு காட்டப்பட்டுள்ளது. அதன்படி அப்பொருளின் விலையாக இருக்கத்தக்கது.

(1) மூவாயிரத்து நானூற்று ஐம்பது ரூபா அறுபதுசதம்
(2) ஐயாயிரத்து முன்னூற்று நாற்பது ரூபா ஐம்பதுசதம்
(3) நான்காயிரத்து ஐந்நூற்று அறுபது ரூபா ஐம்பதுசதம்

35) தடித்த எழுத்தில் தரப்பட்ட சொற்களுக்கான ஒத்த சொற்களைத் தெரிவு செய்க.

இரவு **வானத்திலே** பூரண **சந்திரன்** தோன்றியது.

1) மேகம்,கதிரவன் 2) சந்திரன்,திங்கள் 3) விசும்பு,அம்புலி

36) ஒரே இடத்தில் இரண்டு மோட்டார் வண்டிகள் ஒன்றுக்கொன்று எதிர்த்திசையில் புறப்பட்டுச் சென்றன. ஒரு வண்டி 250 மீற்றர் தூரம் சென்று மீண்டும் தான் சென்ற வழியே 50 மீற்றர் திரும்பி வந்து நிறுத்தியது. மற்றைய வண்டி 200 மீற்றர் தூரம் சென்று நின்றது. தற்போது இரண்டு வண்டிகளுக்கு மிடையே உள்ள தூரம் எவ்வளவு?

1) 400 மீற்றர் 2) 250 மீற்றர்
3) 450 மீற்றர்

37) இல்ல விளையாட்டுப் போட்டியில் நூறு புள்ளிகளைபெறும் இல்லத்திற்கு 2 புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்படும்.மேலதிகமாக 10 புள்ளிகள் கிடைத்திருந்தால் அந்த இல்லம் மொத்தமாக எத்தனை புள்ளிகளைப் பெற்றிருக்கும்.

(1) 600 (2) 500 (3) 510

38) பாடசாலை ஒன்றில் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பயணிகள் 11நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்று செப்ரெம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்தது. எனின் திருத்தும் பணிகள் ஆரம்பித்த நாள் எது?

(1) 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (2) 14ஆம் திகதி திங்கட்கிழமை
(3) 17ஆம் திகதி வியாழக்கிழமை

39) நீளம்,அகலம், உயரம் ஆகியன 6cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 27 (2) 36 (3) 18

40) ஒரு கணிதச் செய்கையில் ஒற்றை எண்ணை விடையாகப் பெறும் சந்தர்ப்பம் எது?

(1) ஒற்றைஎண்ணை ஒற்றை எண்ணால் கூட்டும்போது
(2) ஒற்றை எண்ணை இரட்டை எண்ணால் பெருக்கும்போது
(3) ஒற்றை எண்ணை ஒற்றை எண்ணால் பெருக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெகாசஸ் குற்றச்சாட்டை மறுத்த சவூதி அரேபியா!

ரியாத், ஜூலை 26

பெகாசஸ் மென்பொருள் மூலம் சவூதி பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் வேவு பார்க்கப்பட்டனர் என்று எழுந்த குற்றச்சாட்டை சவூதி அரேபிய அரசு மறுத்துள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ நிறுவனத்தின் பெகாசஸ் மென்பொருள் மூலம், உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரின் செல்போன் தகவல்கள் திருடப்பட்டுள்ளன என்று தகவல் வெளியானது. இது தொடர்பான விசாரணையில், வொஷிங்டன் போஸ்ட், தி கார்டியன், தி வயர் ஆகிய ஊடக நிறுவனங்களும் ஈடுபட்டன. இதில் பலரின் தொடுதிரை அலைபேசிகளின் தகவல்கள் திருடப்பட்டுள்ளது விசாரணையில் தெரியவந்தது.

இந்தியா, சவூதி அரேபியா, மெக்சிக்கோ உள்ளிட்ட நாடுகள் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி வருகின்றன என்று குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில் இந்தக் குற்றச்சாட்டை சவூதி அரேபியா மறுத்துள்ளது. (ம)






# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்!

மணிலா, ஜூலை 26

பிலிப்பைன்ஸ் நாட்டின் கலபாகன் பகுதிக்கு தென்மேற்கே கடந்த வெள்ளிக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 அலகுகளாகப் பதிவானது. இதனை அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 104. 3 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. நிலநடுக் கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை. (ம)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 09 . 2011

உதிர்வு 26 . 07 . 2020



### அமரர் பிரதீபன் தஸ்விகன்

பழகிச் சிரித்த முகம்
பார்க்கும் நாள் இனி வருமோ!
தொட்டணைத்த உன்மேனி
தொடுவதற்கோர் நாள் வருமோ!
கள்ளமில்லா உன் சிரிப்பை
காண்பதற்கோர் நாள் வருமோ!
ஆண்டு ஒன்றாக
அழுதரற்றும் துயர் போமோ!
எங்குள்ளாய் எம் பிள்ளாய்!
இனி இப்பிறப்பில் காண்போமோ!
இறையடியில் அமைதிபெற
இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

"சரஸ்வதி வாசம்"
அளவெட்டி மத்தி, அளவெட்டி.


குடும்பத்தினர்.

# குளிர்காலத்தில் மற்றொரு கொரோனாத் திரிபு வரும்

## பிரான்ஸ் நிபுணர் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 26

**இந்த வருடம் குளிர்காலத்தில் கொரோனாவின் மற்றொரு திரிபு ஏற்படும். அது மிகையான பாதிப்புக்களைத் தரக்கூடியதாக இருக்கும் என்று பிரான்ஸ் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**



கொரோனா வைரஸ் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனாவில் தோன்றியது. இதன் பின்னர் இன்று உலக நாடுகள் பலவும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் ஆரம்பத்தில் இருந்த கொரோனா வைரஸை விடவும் பல்வேறு திரிபு வைரஸ்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இந்தத் திரிபுகள் அதிகம் இனங்காணப்பட்டன. இங்கிலாந்தில் உருமாறிய கொரோனாவுக்கு அல்பா என்றும் இந்தியாவில் உருமாறிய கொரோனாவுக்கு டெல்டா என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திரிவுகளில் டெல்டாதான் அதிகம் ஆபத்து நிறைந்தது என்று கருதப்படுகின்றது. இவ்வாறிருக்கையில், வரும் குளிர்காலத் துடன் புதிதாக ஒரு திரிவு தோன்றும் என்றும் அது ஆபத்து நிறைந்ததாக இருக்கும் என்றும் பிரான்ஸின் நிபுணரான ஜூன் பிரான்கோய்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டெல்டா வகை [illegible]டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு புதிய கொரோனா பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த ஆண்டு குளிர்காலத்தில் மேலும் ஒரு புதிய வகை கொரோனா மாறுபாடு உருவாக சாத்தியம் உள்ளது. அதன் விளைவுகளை இப்போது கணிக்க முடியாது. அது ஆபத்தானதாக இருக்கலாம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் நமக்கு இருக்கும் பெரிய சவால் என்னவென்றால், தடுப்பூசி போடப்பட்ட நாடுகள் மற்றும் தடுப்பூசி போடப்படாத நாடுகள் என்று இரண்டு [illegible] எவ்வாறு [illegible]போகிறோம் என்பதுதான் - என்றார். (ம)

# 90 வீத எல்லைகளை கைப்பற்றி விட்டோம்!

## தலிபான்கள் அறிவிப்பு

காபூல், ஜூலை 26

ஆப்கானிஸ்தானின் 90 வீதமான எல்லைகளைக் கைப்பற்றிவிட்டோம் என்று தலிபான்கள் அமைப்பு அறிவித்துள்ளது. அமெரிக்கப் படைகள் வெளியேறியதன் பின்னர் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அமைப்பு உச்சக்கட்டத் தாக்குதலை நடத்தி வருகின்றது. ஆப்கானிஸ்தானில் 400 மாவட்டங்கள் உள்ளன. இதில் 200 மாவட்டங்கள் வரை தற்போது தலிபான்கள் வசம் சென்றுள்ளன என்று தெரியவந்துள்ளது. முதலாவதாக ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதிகள் முழுவதையும் கைப்பற்ற அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான், ஈரான், கஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைகள் உள்ளன. இதில் கஜிகிஸ்தான் எல்லை முழுவதையும் தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றிவிட்டனர். உஸ்பெகிஸ்தானின் பெரும் பகுதி அவர்கள் வசம் உள்ளது.

90 சதவீத எல்லைப் பகுதிகளை கைப்பற்றிவிட்டதாக தலிபானின் செய்தி தொடர்பாளர் முஜாகித் தெரிவித்துள்ளார். "ஒட்டுமொத்த எல்லை பகுதி முழுவதையும் நாங்கள் விரைவில் கைப்பற்றிவிடுவோம். அதன் பிறகு நாடு முழுவதும் எங்கள் வசம் வரும். பிறகு நாடு முழுவதையும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்.

அதே நேரத்தில் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகள் ஆப்கானிஸ்தானில் செயல்பட அனுமதிக்க மாட்டோம். குறிப்பாக ஐ.எஸ். அமைப்புக்கு ஆப்கானிஸ்தானில் இடம் வழங்க முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்


**மேடம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். பணி பற்றிய டென்ஷன் நீங்கும். நிதி நிலை மேம்படும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். எதிர்பார்ப்பை அடைவதற்கான சந்தர்ப்பம் உண்டாகும்.


**இடபம்:** முயற்சியில் தீவிரம் காட்டி வெற்றியை எளிதாக நெருங்குவீர்கள். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவர். பொறுமை தேவை.


**மிதுனம்:** மனசாட்சிக்கு மதிப்பு கொடுங்கள். தீயவர்களின் நட்பு வேண்டாம். முன்னேறுவதற்குக் குறுக்கு வழியை நாடுவது நல்லதல்ல. வாழ்க்கைத்தரத்தை உயர்த்த கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.


**கடகம்:** திட்டமிட்ட விஷயங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினருடன் இனிய முறையில் நேரம் செலவிட்டு மகிழ்வீர்கள். மனதில் தெளிவு பிறக்கும் நாள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.


**சிம்மம்:** வாய்ப்புகளைச் சரியாக பயன்படுத்துவீர்கள். நல்லவர்கள் வழிகாட்டுவர். உங்களால் நன்மை அடைந்த உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். வழக்கத்தை விட சற்று பணிச்சுமை கூடும்.


**கன்னி:** வீடு, பணி இடமாற்றத்துக்கு வாய்ப்புண்டு. வீண்பயம் மறையும். புதிய வேலை தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். உடல்நிலை சீராகும். பேச்சில் கவனம் தேவை.


**துலாம்:** பயணத்தால் ஆதாயம் காண்பீர்கள். சோர்வு ஏற்பட்டாலும் உற்சாகம் குறையாது. வியாபாரத்தில் வருமானம் உயரும். பிள்ளைகளால் நன்மை ஏற்படும்.
விசாகம் 1,2,3: பணியாளர்களுக்கு


**விருச்சிகம்:** முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் மனக்கசப்பு நீங்கும். மற்றவர் விஷயங்களில் ஆர்வம் காட்ட வேண்டாம். பொறுமை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும்.


**தனுசு:** கற்பனை பயங்களை உதறுங்கள். உழைப்பு அதிகம் தேவைப்படும். மன அமைதி தேவையென்றால் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.


**மகரம்:** புதிய பதவி எதிர்பார்த்திருப்பவர்களுக்கு தடங்கல் ஏற்படலாம். புதிய வாகனம் வாங்குவதை கொஞ்சம் தள்ளிப் போடுவது நல்லது.


**கும்பம்:** உணவுக் கட்டுப்பாடு அவசியம். யோகமான நாள். கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடு வராமல் விட்டுக் கொடுங்கள்.



**மீனம்:** பொருளாதாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். நண்பர்கள் உதவி செய்வர். கடன் வாங்கும் சூழ்நிலை வரலாம். தொழிலை விரிவாக்க வேண்டாம்.

# இலங்கைக்கு நேற்றும் முறையான கவனிப்பு!

**கொழும்பு, ஜூலை 26**

**இலங்கைக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில், அபார வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கின்றது இந்திய அணி.**





இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பிரேமதாஸ மைதானத்தில் பொதுவாக விரட்டல் சிரமத்துக்கு உரியதொன்று. இதனால் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. சூரியக் குமார் யாதவின் பிரமாதமான ஆட்டம் ரி20 ஆட்டங்களிலும் எதிரொலித்தது. அவர் 34 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தவான் 36 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சமீர, ஹசரன்க இருவரும் தலா 2 இலக்குகளையும், கருணாரத்ன ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் சிறப்பாகவே அமைந்தது. மினொட் பானுக கொடுத்த வாய்ப்பை பாண்டியா தவறவிட இந்திய அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. அதன்பின் 10 ஓட்டங்களுடன் பானுகவை வெளியேற்றினார் குருனல் பாண்டியா. தனஞ்சய டி சில்வாவை போல்ட்டாக்கினார் சகல். இதுதான் ஆட்டத்தில் திருப்பத்தை ஏற்படுத்திய இலக்கு.

அதன் பின்னர் சகலின் பந்துவீச்சு எழுச்சி கண்டது. சரித் அசலன்க மத்திய வரிசையில் பெற்ற 44 ஓட்டங்கள்தான் அதிகபட்சம். அதன் பின்னர் சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய வெறும் 126 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி. பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார் 4 இலக்குகளையும், தீபக் சகர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## நறுவிலிகுளம் மாதிரிக் கிராமத்தில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு

மன்னார், ஜூலை 26



மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமக் குடியேற்றப் பகுதிகளில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் தெரிவித்தனர்

எமது கிராமத்தில் 100 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றோம். கடந்த 2003ஆம் ஆண்டளவில் வேர்ள் விஷன் தொண்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கியில் இருந்து குடிநீரை பெற்றுவந்தோம். தற்போது இயந்திரம், நீர் இணைப்புகள் மற்றும் நீர்த்தொட்டி ஆகியன பழுதடைந்துள்ளதால் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதனால் பணம் கொடுத்து குடிதண்ணீர் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு உள்ள அதிகமான கிணறுகள் உவர் நீராக இருப்பதால் குடிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளோம். எனவே உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து எமது கிராமத்தில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றனர். (ப-213)

## ஹிஷாலினிக்கு நீதி வேண்டும்

*இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து*

கொழும்பு,ஜூலை 26

மலையகச் சிறுமி ஹிஷாலினிக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், எதிர்காலத்தில் இது போன்ற துன்புறுத்தல்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்க முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் அடிமைத்தனம் தொடர்ந்து சிறுவர்களின் முழு வளர்ச்சி திறனை அடைய முடியாத சூழலை உருவாக்கி வருகின்றன. நீண்ட கால உடல் மற்றும் மன குறைபாடுகளுக்கும் ஆளாகின்றனர்.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்கள் பெரியவர்களாக மாறியவுடன் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை மீண்டும் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாதது. இதனால் சிறுவர் துஷ்பிரயோகத்தின் தீய சுழற்சி தொடர்கின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை சமுதாயத்தில் மதிப்புகள் மோசமடைவதையும், பாலின சமத்துவமின்மையையும் காட்டுகின்றது. எனவே இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கு பெண்கள் மட்டுமல்ல, அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 31.12.1947 விண்ணில் 06.08.2020



அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் ( ராசா )
( C.T.B நடத்துனர் - நெடுந்தீவு )
ஓராண்டு ஆனதுவோ
உங்கள் முகம் காணாமல்
எம் இதயம் நிறைந்த அப்பாவே
நித்தம் புலம்புகின்றோம்
ஆறவில்லை எங்கள் துயர்
ஓம் சாந்தி.! சாந்தி.!! சாந்தி.!!!
குடும்பத்தினர்

# குளிசைகளை வீசி எறிந்த ரிஷாத்தின் செயல் அம்பலம்

கொழும்பு,ஜூலை 26
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், கொழும்பு தேசிய மருத்துவமனையில் தங்கியிருந்த போது, மலசல கூடத்துக்குள் செய்த இரகசியம் அம்பலமாகியுள்ளது.

மருத்துவர்களால் அவருக்குப் பரிந்துரைக்கப்பட்ட ஔடதங்களை (குளிசைகளை) குடிக்காமல், மலசலக்கூடத்துக்குச் சென்று, அங்கிருக்கும் துளைகளின் ஊடாக அவற்றை வெளியில் வீசியுள்ளார்.

தனக்கு வழங்கப்படும் குளிசைகளை, கடதாசிகளால் சுற்றிக்கொள்ளும் ரிசாத், இவ்வாறு வீசியெறிந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

மலசலக்கூடத்துக்கு வெளியே வீசியெறியப்பட்ட குளிசைகள், ரிஷாத் பதியூதீனுக்கு வழங்கப்பட்டவை என்பதை, அவரை கண்காணித்த மருத்துவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேளையில், நோய்வாய்பட்டதால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருடைய வீட்டில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய சிறுமி, எரிகாயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த நாளன்றே, அவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அவர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுமுன்தினம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ஒ.4)

# வாகன இலக்கத் தகடுகளை தபாலில் அனுப்பத் திட்டம்

கொழும்பு,ஜூலை 26
வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளை தபால் மூலம் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். தபால் சேவையின் வருடாந்த வருமானம் 9 பில்லியன் மாத்திரமே கிடைக்கப் பெறுகின்றது. ஆனால் 14 பில்லியன் ரூபா செலவு செய்யப்படுகின்றது. இதனால் 5 பில்லியன் ரூபா திறைசேரி செலுத்த வேண்டியுள்ளது.

எனவே தபால் சேவையின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, வாகன இலக்கத் தகடுகளை தபால் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 27.09.1953 விண்ணில் 26.07.2016



அமரர் திருமதி பாலசௌந்தரி பூபாலசிங்கம்
உன் உடல் மூலம் என் உடல் தந்த அன்னையே
உன் உதிரத்தை உணவாக தந்து
உயிருக்கு உணர்வு அளித்த அன்னையே
ஆண்டுகள் ஐந்து நகர்ந்தாலும்
எம்மை விட்டு என்றும் அகலாது உம் நினைவுகள்
பிறப்போடு இறப்பு இணைந்ததெனினும்
இழப்பினை நெஞ்சம் ஏற்பதில்லை அம்மா
என்றும் உங்கள் நினைவோடு..
ஓம் சாந்தி.! சாந்தி.!! சாந்தி.!!!
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
நினைவுகளுடன்
குடும்பத்தினர்

கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 18.11.1988 விண்ணில் 24.07.2021



வாமதேவன் தினேஸ்குமார்
( தென்கோவை இருபாலை கற்பக விநாயகர் ஆலய திருப்பணிச்சபை உறுப்பினர் )
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவுத்துயரில்
தென்கோவை இருபாலை கற்பக விநாயகர் ஆலய திருப்பணிச்சபை

# 1,656 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 26
இலங்கையில் நேற்றும் 1,656 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 96 ஆயிரத்து 506ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 937 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து நாட்டில் இதுவரை தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 67 ஆயிரத்து 602ஆக எகிறியுள்ளது. (ம-22)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குழந்தையாய் 30.09.2011
தெய்வமாக 26.07.2020

செல்வன் பிரதீபன் தஸ்விகன்
சின்னஞ் சிறு சுடரே தஸ்வின்
பிரதீபன் வீட்டுதித்த மூத்த சூரியனே
கற்கண்டுப் பேச்சோனே
கால் நடந்த இளம்பிறையே

நந்தா விளக்கெனவே நின்றொளிர்வாய் என்றிருக்க
புயற்காற்றில் தீபமென ஓர் நொடியில் அணைந்தாயோ
வீடிருண்டு போச்சுதையா
உனைப்பெற்றோர்
சிரிப்பிழந்து ஒருவருடம் ஆச்சுதையா

மின்னலென ஒரு நொடியில் விண்ணுலகம் சென்றாயே
உனைப்பெற்றோர், உடன் பிறந்தோர், சுற்றமெல்லாம் பரிதவிக்க
கண்ணீர்கரையில் ஓராண்டாய் நடக்கின்றோம்
நிம்மதியாய் நீ உறங்கு
உன் நினைவோடு வாழ்ந்திடுவோம்.
நண்பர்கள்
அ.மோகனராஜ்
இ.நிரூபன்

11 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 04.12.1992
உதிர்வு 26.07.2010



செல்வி சேவியர் சுபாஜனா
எம் குடும்ப பாச குல விளக்காய்
ஒரு சுவட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் நினையாத நாளில்லையம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கதீசன் காட்வெயார்
குருநகர் சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.
என்றும் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

அரச மரக்குற்றிகள் இலவசம்
யாழ் நகரில் 2அடி சிறு குற்றிகளாக வெட்டப்பட்ட அரச மரக்குற்றிகள் விறகு மற்றும் கோயில் தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடியது.
தொடர்பு : 074 030 8981

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன் ஒப்பந்தகாரர் மற்றும் நாட்கூலி மேசன் தேவை.
தொடர்பு: 076 316 5734

வேலையாட்கள் தேவை
(ஆண்/பெண் இருபாலாரும்)
யாழ் நகரில் இயங்கி வரும் மொத்த மற்றும் சில்லறை பான்சி கடைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
0774 68 33 54
தொடர்பு காலை 9.30 - மாலை 4.00 மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
30 . 06 . 1943

இறப்பு
06 . 08 . 2020

அமரர் திருமதி

## சின்னராஜா இராஜேஸ்வரி

(தவில் மாமேதை N.R. சின்னராஜாவின் அன்பு மனைவி)

**திதி: தேய்பிறை திருதியை**

அன்பினிலே சிறந்தவராய் மண்ணிலே
உதித்து அமைவுபெற்ற வாழ்வினில்
நறுமனம் பரப்பி இல்லத்தின் விருட்சமாய்
பாசநிழல் தாயாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே விண்ணக
வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஒரு ஆண்டு பறந்தோடிச் சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
பணிந்திடுவோம்

**கோவில் வாசல்,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்**
**077 628 0254, 077 519 4510**

---

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல - J/1594 பதிவு திகதி: - 11.03.1972

# பதவி வெற்றிடம்

01. பதவி - விற்பனை உதவியாளர் (03)
குறியீட்டு இல. - 308/17 (04/2018 இன்படி)
சம்பள அளவுத் திட்டம் - 14725- 115X10-130X10-17175
வயதெல்லை - 21 - 45 வரை
பால் - ஆண்

**தகைமைகள்:-**

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ட தரச் சான்றிதழ்

**அல்லது**

ஆ. 08ம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு :-**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## விண்ணப்ப முடிவு திகதி – 15.08.2021


மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக் காரி யாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் **கல்விச் சான்றிதழ் வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ்** மற்றும் **அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்** ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு **தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உதவியாளர் (308 / 17) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி** எனும் முகவரிக்கு **15.08.2021**ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**
**26.07.2021**

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர்,**
**திரு.வ.தெய்வேந்திரம்**

---

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் செல்வரெத்தினம் ( S.S )

( மூன்றுமுடி கருமாரி அம்மன் தர்மகர்த்தாவும் மற்றும் பெரியகடை முன்னாள் வர்த்தகரும் )

அல்லைப்பிட்டி 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **சுப்பிரமணியம் செல்வரெத்தினம் (S.S)** நேற்று (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சிவஞானம் தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியவதியின் பாசமிகு கணவரும் சிவபாக்கியவதி (அல்லைப்பிட்டி), இராஜேஸ்வரி (மல்லாவி), இராசலிங்கம் (SR - பிரான்ஸ்), குணபாலசிங்கம் (ஜேர்மனி), அருமைநாயகம் (ஜேர்மனி), அன்னலட்சுமி (கொலண்ட) காலஞ்சென்ற சோதிலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் தங்கராசா, செல்வராணி, ஜான்சிராணி, ரஞ்சினிதேவி, தவநாயகம், தமிழினி, பரமேஸ்வரி, புஸ்பராணி, ஞானசேகரம், காலஞ்சென்ற சிவநேசம், பஞ்சாட்சரதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 48 29 739**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

---

# மரண அறிவித்தல்



தோற்றம்
11 . 04 . 1943

மறைவு
25 . 07 . 2021

## திருமதி விநாயகமூர்த்தி தவமணி

யாழ் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் பாலிநகர் வவுனிக்குளம், கிராஞ்சி லேன் - மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி விநாயகமூர்த்தி தவமணி** நேற்று (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் பாசமிகு மனைவியும் சுகுமாரன் (முகாமைத்துவ பணிப்பாளர் - மேக்கன்ரைஸ் பாதுகாப்புச் சேவை), அவர்களின் அன்புத் தாயாரும் நிதர்சினியின் பாசமிகு மாமியாரும் கந்தசாமி, காலஞ்சென்ற கந்தையா மற்றும் குமாரசிங்கம், பாக்கியம், சந்திரபாலன் (கனடா), காலஞ்சென்ற ரத்தினசிங்கம் மற்றும் செல்வமணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் செந்தூரன் - தர்சிகா (பிரான்ஸ்), டில்லிக்குமரன் (ஜேர்மனி), நிரோஷி - புஸ்பகுமார் (புகையிரத நிலைய அதிபர் - கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காசினி, கரிஸ்னி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிராஞ்சி லேன்,**
**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல் :**
**மகன்**
**077 77 30 597 ( வி.சுகுமாரன் )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வௌவால்கள் மூலம் பரவியது கொரோனா?

கொழும்பு,ஜூலை 26
தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் சிங்கங்கள் உட்பட சில விலங்குகளுக்கு வௌவால்களிடமிருந்து கொரோனாத் தொற்றுப் பரவியதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



குறித்த மிருகக்காட்சிசாலையிலுள்ள 'தோர்' என்ற சிங்கத்துக்கு முதலில் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. தொடர்ந்து தொற்றுக்குள்ளான சிங்கக் குட்டிகள், இரண்டு ஒரங்குட்டான்கள் மற்றும் இரண்டு சிம்பன்ஸிகளின் நிலை சாதாரணமாக உள்ளது.

அதேவேளை தெஹிவளை மிருகக் காட்சிசாலை உள்ளிட்ட அனைத்து உயிரியல் பூங்காக்களும் இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்படும். மிருகக்காட்சிசாலைகள் மூடப்படுவதால் விலங்குகளின் உணவுத் தேவைகளுக்கான நிதியைப் பெறுவது கடினம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

# நரம்பியல் வினாவிடைப் போட்டியில் யாழ்., கிழக்குப் பல்கலைகள் சாதனை







யாழ்ப்பாணம், ஜூலை 26

**மருத்துவ பீடங்களுக்கிடையிலான முதலாவது அகில இலங்கை நரம்பியல் வினாவிடைப் போட்டியில் கிழக்குப் பல்கலைக்கழகம் முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.**

கடந்த 20 ஆம் திகதி இலங்கை நரம்பியல் சங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் சூம் வழிப்போட்டியாக இந்நிகழ்வு நடைபெற்றது.

போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்ந்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டு இருந்தது. பின்னணியிலிருந்த யாழ்ப்பாணம், கொழும்பு பல்கலைக்கழகங்கள் போட்டியின் இறுதிக் கட்டத்தில் மிகச்சிறப்பாக பதிலளித்து முன்னிலை வகித்தமை பார்வையாளர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது. போட்டியின் இறுதிச் சுற்றில் மூன்றாம் இடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடமும், கிழக்கு மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்கள் சமமான புள்ளிகளை பெற்று முதலிடத்திலும் இருந்தன. வெற்றியாளரை தெரிவு செய்யும் "TieBreaker" சுற்றில் கொழும்பு மருத்துவ பீடத்தை 10க்கு 0 என்ற புள்ளி அடிப்படையில் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தோற்கடித்து வரலாற்றுச் சாதனை படைத்தனர். வெற்றிப் பரிசாக கிழக்கு பல்கலைக்கழகம் ஒரு லட்சம் ரூபா பரிசுத் தொகையையும் யாழ். பல்கலைக்கழகம் ஐம்பதாயிரம் ரூபா பரிசுத்தொகையையும் வென் றன.

இப் போட்டிக்கு இரு பல்கலைக்கழக மாணவர்களையும் யாழ் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர் மருத்துவ கலா நிதி அஜினி அரசலிங்கம் பயிற்றுவித்தார். அவருடன் இணைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி ப.மயூரதனும், சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ கலாநிதி ரோஷினி முருகப்பிள்ளையும் மாணவர்களை தயார்ப்படுத்த அயராது பாடுபட்டனர். (ப)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா தவனேஸ்வரன்**
(உரிமையாளர் தபேசன் விவசாய மாளிகை)

மலர்வு 10.04.1955 உதிர்வு 20.07.2019

திதி: திருதியை [26.07.2021]

அப்பா இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் போது தான் தெரியும் "அப்பா என்றது" வார்த்தை அல்ல அது வாழ்க்கையின் பாடம் என்று

குடும்பத்தினர்
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 09 . 1991



மறைவு 13 . 07 . 2021

### ஏபிரகாம் லிங்கன் தனோஷன்
**( யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவன் )**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட **ஏபிரகாம் லிங்கன் தனோஷன்** கடந்த (13.07.2021) செவ்வாய்க்கிழமை மலேசியாவில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் ஏபிரகாம் லிங்கன் (யாழ் மத்திய கல்லூரியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்) - ரூபவதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் ரூபலோசினியின் (மலேசியா) அன்புக் கணவரும், கிறிஸ்ரீனாவின் (மலேசியா) அன்புத் தந்தையும் சஞ்ஜீவன், மயூரன், பிரதீப், கம்ஷா (ஜேர்மனி), திஷோன், அக்ஷா ஆகியோரின் அன்பு சகோதரனும் இவன்சி, அஸ்மித், டியோன்சியா, அபிஷேக், அப்சலோம், ஏரோன் ஆகியோரின் சிறிய தந்தையும் இனோரிஸ், ஜெத்னியல் ஆகியோரின் மாமனாரும் எடித்தா அறீனா, மதுரா, பியூலா, போல்டன் ராஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெற்றது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ம் குறுக்குத் தெரு,
மணியந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
தந்தை - 076 3368 449
சகோதரன் - 077 888 1853

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 12 . 1940



இறப்பு 25 . 07 . 2021

### திரு. சிவஞானசுந்தரம் தர்மசேகரம்
**( ஓய்வு பெற்ற இயந்திர இயக்குனர் - சங்கானை ப.நோ.கூ சங்கம் )**

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும், கொண்ட **திரு சிவஞானசுந்தரம் தர்மசேகரம்** அவர்கள் நேற்று (25.07.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (ஆயுள்வேத வைத்தியர்,நீர் வேலி), தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிங்கராசா தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (ஓய்வுபெற்ற போதனாசிரியை, முறைசாரப்பிரிவு) அவர்களின் அன்புக் கணவரும், விபுஷானந்தி (ஆசிரியை, இணுவில் இந்து கல்லூரி), உஷானந்தி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), பிரஷானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி - பளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரகுமார் (தபாலகம்-மானிப்பாய்), பகீரதன் (கட்டட மேற்பார்வையாளர்-யாழ்ப்பாணம்), சுரேஸ்கரன் (உரிமையாளர் - உழவர் கழஞ்சியம், திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷனன் ,அபிஸ்ணவி, அஜீஷன், அனுஸ்கவி, சயிந்தவி ,சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2021) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் தொட்டிலடிச் சந்தி சண்டிலிப்பாயில் இடம்பெற்று விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 622 4206

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 'டெல்டா'...

டெல்டா தொற்றாளர்கள் 7 பேர் இனங்காணப்பட்டதையடுத்து கொழும்பு, கெஸ்பேவ ஜபுரளிய, லுல்லவல வீதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது எனக் கெஸ்பேவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சமந்திகா விஜேசுந்தர தெரிவித்தார்.

குறித்த தொழிற்சாலையில் 7 பேருக்கு டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, மேலும் 121 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ச்சியாக இனங்காணப்பட்டு வந்ததையடுத்து குறித்த ஆடைத்தொழிற்சாலையில் 166 ஊழியர்கள் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதையடுத்து ஆடைத்தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இலங்கையில் டெல்டா வைரஸ் இன்னும் ஒரு மாதத்துக்குள் பிரதான வைரஸ் தொற்றாக மாறும் அபாயம் இருக்கின்றது எனச் சுகாதார நிபுணர்கள் கடந்த வாரம் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

### தமிழரை....

பற்றாளர்களால் நாட்டை பின்நோக்கி நகர்த்துவதற்கான பாடுபாதகச் செயல் என்று கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'சிம்பாப்வே அல்லது வெனிசுவேலா நாடுகளுக்கு நேர்ந்த நிலைமை இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயம் உருவாகியுள்ளது. இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க இன, மத, மொழி, சாதி வேறுபாடு இன்றி இலங்கையர் என்ற அடையாளத்துடன் அனைவரும் அணிதிரள வேண்டும்.

நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை தற்போதைய அரசுக்கு ஒப்படைத்த போது நான் நிதி அமைச்சராகப் பதவி வகித்தேன். அப்போது அந்நிய செலாவணி கையிருப்பு 7.6 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. அந்தத் தொகை எதிர்வரும் நாள்களில் 2.6 பில்லியன் டொலராக வீழ்ச்சியடையும். சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் அந்நிய செலாவணி கையிருப்பு மிகவும் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாக இதனைக் கருத வேண்டும். கடந்த 2020ஆம் ஆண்டில் அரச வருமானங்கள் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளன. வரவு செலவுத் திட்ட இடைவெளியும் அதிகரித்துள்ளது. இந்த அரசு நினைத்துப் பார்க்க முடியாத அளவு பணத்தை அச்சிட்டுள்ளது. இனவாத, மதவாத காலம் கடந்த பழைய கொள்கைகள் கோட்பாடுகளே தோல்வியடைந்துள்ளன. உண்மையிலேயே நாட்டுப்பற்று என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள பௌத்த பெயரில் தமிழரைக் கொல்வது தேசப்பற்றாகாது. சிங்களம் என்று சொல்லி கடைகளை எரிப்பதனாலும், வீடுகளை உடைப்பதனாலும் அதிகளவில் பாதிக்கப்படுவது சிங்களவர்களே.

ராஜபக்ச விரோத கூட்டணிகளை அமைப்பதில் மட்டும் வெற்றி கிடைக்காது. கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுடன் தேசிய கொள்கைகளை உருவாக்க வேண்டும். நடுநிலையான கொள்கைகள் பின்பற்றப்பட்டு மெய்யான தேசப்பற்றை உருவாக்குவதற்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்' என்றார். (ம-22)

### வெலிக்கடை....

குட்டிமணி அடங்கலாக 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதன் 38ஆவது நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கின் முன்னால் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் வினோனோக ராதலிங்கம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உப தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தவிசாளருமான இந்திரகுமார பிரசன்னா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். நினைவேந்தலைத் தடுப்பதற்கு பொலிஸார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவற்றையெல்லாம் தகர்த்து மேற்படி நினைவேந்தல் இடம்பெற்றது. (ம)

### ஹிஷாலினிக்கு...

கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

சமூக அமைப்புகள் மற்றும் பெண்கள் அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளன என்று அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். மகளிர் அமைப்புக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை நடத்தின. இதில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (த-319)

### கே.கே.எஸ்...

ருந்து காலை 8.07 மணிக்கு வவுனியாவைச் சென்றடையும்.

வவுனியாவிலிருந்து பிற்பகல் 5 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 8 மணிக்கு காங்கேசன்துறை சென்றடையும் என யாழ்ப்பாண தொடருந்து நிலையத்தின் பிரதான அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார். (ம-159)

### செப்ரெம்பர்...

இதேவேளை, நாட்டில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கொரோனாத் தடுப்பூசி போடப்படாத நபர்கள் என்பது தெரியவந்துள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார். (ம-22)

### வவுனியாவில்...

யில் சேர்க்கப்பட்டனர். குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்று மாலை குறித்த பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த ஐவர் கொண்ட இளைஞர் குழுவினர் அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்கள் மீது சரமாரியாக ஆயுதங்களால் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் பெண் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை ஈச்சங்குளம் பொலிசார் கைதுசெய்துள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த நபர்களால் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-110)

### தீயில்...

வடக்கைச் சேர்ந்த 42 வயதுடைய கஜேந்திரன் பத்மரேகா என்பவரே உயிரிழந்தவர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை தனக்குத் தானே தீமூட்டிய குறித்த பெண் எரிவு தாங்க முடியாமல் கிணற்றுக்கள் குதித்துள்ளார்.

இதன்போது உறவினர்களால் காப்பாற்றப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (ப-9,159)

### கொரோனா...

இல்லை எனவும், தம்மில் பலர் வயதானவர்கள் என்பதுடன் சுகவீனமுற்று இருக்கின்றனர் எனவும் புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 46 பேர் தற்போது கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள நிலையில், அவர்களில் சிலர் 60 வயதைக் கடந்தும், சுகயீனமுற்றும் உள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தாம் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்குமாறு பல தடவைகள் வலியுறுத்தியபோதும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் சுகாதார வசதிகள் குறைவாக உள்ளன எனவும், கைதிகள் சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும், அவர்களை முறையாக பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தமிழ் அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பொதுமன்னிப்பின் கீழ் 16 தமிழ் அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட்டமைக்காக ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துள்ள அவர்கள், அதே கரிசனையை தம் மீதும் காட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-22)

### மஹாராஜா...

நேற்று உயிரிழந்தார். ராஜேந்திரம் ராஜமகேந்திரன் யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பூர்வீகமாகக் கொண்டவர். அவரது குழுமத்தில் ஏறத்தாழ 25 முன்னணி நிறுவனங்கள் இயங்குகின்றன என்று கூறப்படுகின்றது. பெரும் தொழிற்சாலைகள் தொட்டுப் பல பிரபல ஊடக நிறுவனங்களும் இவரது குழுமத்தில் செயற்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இவரின் நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் தீர்க்கமான சக்தியாகவும் ராஜேந்திரம் ராஜமகேந்திரன் செயற்பட்டார். பல்வேறுபட்ட அடக்குமுறைகள், நிழல் யுத்தங்களைத் தாண்டி அவர் இவ்வாறு சிகரம் தொட்டிருந்தார்.

இவரின் மறைவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பிரபல அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (ம)

### மாவட்ட...

யில் விற்கப்படும் அனைத்து சமையல் எரிவாயு சிலிண்டர்களின் எடையை கிலோ கிராமில் காண்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 18 லீற்றர் (9.6 கிலோ) சமையல் எரிவாயு சிலிண்டரின் அதிகபட்ச சில்லறை விலை ஆயிரத்து 150 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 259 ரூபாவாகவும், வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 216 ரூபாவாகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 243 ரூபாவாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 242 ரூபாவாகவும், மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 234 ரூபாவாகவும், திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 217 ரூபாவாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 250 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-22)

### தவறான...

றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

மீசாலை வடக்கு வேம்பிராய் கொடிகாமத்தைச் சேர்ந்த 61 வயதுடைய இராஜ குலசிங்கம் ஈஸ்வரி என்பவரே உயிரிழந்தவர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)



## 23 ஆண்கள் உட்பட மேலும் 45 பேர் சாவு

கொழும்பு, ஜூலை 26

இலங்கையில் மேலும் 45 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. உயிரிழந்த 45 பேரில் 23 பேர் ஆண்கள், 22 பேர் பெண்கள். நாட்டில் இது வரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 99ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் விவகாரம் இன்று அடுத்த கட்ட பேச்சு



கொழும்பு.ஜூலை 26

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, கல்வி அமைச்சருக்கும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு இன்று திங்கட்கிழமை கல்வி அமைச்சில் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

சந்திப்பில் அமைச்சரவை எடுக்கும் முடிவுகள், ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு தெரிவிக்கப்படும்.

செயல்முறைப் பரீட்சைகளில் இருந்து ஆசிரியர்கள் விலகினால், அவர்கள் சமூகத்திலிருந்து பல்வேறு களங்கங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அனைத்து ஆசிரியர்களும் இந்த நேரத்தில் மாணவர்களின் கல்வி குறித்து உணர வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஓ,4)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்தும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**U.SA பாம்**
குளப்பிட்டி வீதி
ஆனைக்கோட்டை.
077 868 9500

**ஹோட்டல் வேலைக்கு சமையலாளர் தேவை**

விசுவமடுவில் அமைந்துள்ள எமது **கிரான்** ஹோட்டல் உணவகத்திற்கு றொட்டி, றைஸ் சமையல் அனுபவம் மிக்கவர் தேவை.
சலுகை - உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு : 076 981 9241

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உயர் அதிகாரி ஒருவருக்கு யாழ் நகரை அண்மித்த நல்லூர், சுண்டுக்குளி, கச்சேரியடி மற்றும் வண்ணார்பண்ணை பகுதியில் 3 தொடக்கம் 5 அறைகளை கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்ட சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிடத்துடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 076 737 4444

**சிறுநீரகம் தேவை**

46 வயதுடைய ஆண் ஒருவருக்கு B,O குருதி வகையுடைய **சிறுநீரகம்** உடனடியாக தேவை.
(45 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.)

தொடர்பு : 076 737 2562

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

ஜனனம் 19 - 04 - 1954



இறப்பு 06 - 08 - 2020

**அமரர் திருமதி பரமேஸ்வரி யோகலிங்கம்**
(நீதி: அபரபக்க திருதியை)

அந்தி பகலாய் இறைவனை வந்தித்து
பெற்றெடுத்து ஓடாய்த் தேய்ந்து - எமை
வளர்த்தெடுத்து உலகுதனில் வாழ வைத்தீரே!
இறை தொண்டே நிலையானது எனக் கருதி
நேராத கோயில் எல்லாம் நேர்த்திகள் வைத்து
நோன்புகள் நோற்று - வாழ வழி காட்டினீரே!
அந்திபடும் நேரமதில் கொடும்பிணியின் கோரத்தால்
உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஒன்றல்ல நூறாண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்
நல்லீசன் தாளில் நலமே இருக்க தினமும்
இறைஞ்சுகின்றோம்.......
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!

குடும்பத்தினர்.

காளிகோவில் வீதி,
கொடிகாமம்.

தொ.பே: 077 087 5482
077 725 2094

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 26.06.2021 அன்று இறைவனடி சேர்ந்த
எமது அன்புச் செல்வன்

**அமரர் கிருபாமூர்த்தி சிந்துஜன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (24.07.2021) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (26.07.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

எமது அன்புச் செல்வனின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் தெரிவித்தும், இறுதிக் கிரியைகளுக்கு வேண்டிய அனைத்து ஒழுங்குகளையும் புரிந்து உதவிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், பத்திரிகை மூலமும் பிரசுரம் மற்றும் பனர் மூலமும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தும், மலர் வளையங்களை அனுப்பியும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் துயர் பகிர்ந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

தோற்றம்
20.02.1988

மறைவு
26.06.2021

"அக்கா அகம்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

அ.கிருபாமூர்த்தி
மற்றும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.